பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆவணி 18 | திங்கட்கிழமை 03.09.2018 | கதிர் 302


இது ரகசியம் அல்ல!

சில விடயங்களைப் பட்டும் படாமலும், முட்டியும் முட்டாமலும் எழுதாமல், அப்பட்டமாகவும் வெளிப்படையாகவும் எழுத வேண்டிய தேவையும், வேளையும் நெருங்கி வருகின்றன எனத் தோன்றுகின்றது.

இப்போது எங்கள் மத்தியில் அதிகம் பேசப் பக்கம் 03

# 10 கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் புதுடில்லியில் அடுத்த வாரம் முகாம்

## மஹிந்த அங்கு இருக்கும் சமயத்தில்; பிரதமர் மோடியையும் சந்திப்பராம்

கொழும்பு, செப்ரெம்பர் 03


முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்தவாரம் புதுடில்லி செல்லவுள்ள நிலையில், அதே காலப்பகுதியில் இந்திய அரசின் அழைப்பின் பேரில் இலங்கையின் முக்கிய பத்துக் கட்சிகளின் தலைவர்கள் நாடாளுமன்றக் குழு என்ற பெயரில் சபாநாயகர் தலைமையில் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர். அவர்கள் அங்கு ஐந்து நாள்கள் தங்கியிருந்து பேச்சுகளில் ஈடுபடுவர். பக்கம் 14

## 3ஆம் தவணை இன்று ஆரம்பம்

அனைத்து அரச பாடசாலைகளும் மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று 3 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. க.பொ.த. (உயர்தரப் பரீட்சையின் முதலாம் கட்ட மதிப்பீட்டு நிலையங்களாக உபயோகிக்கப்படும் 37 பாடசாலைகள் மாத்திரம் அவற்றின் மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கை பக்கம் 14

## சிறை ஆஸ்பத்திரியிலிருக்கும் ஞானசாரர் விரைவில் சிறைக்கு

### காவியுடையைக் களைய மறுப்பாம்



கொழும்பு, செப்.3

வெலிக்கடை சிறைச்சாலை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரின் உடல்நிலை தேறியுள்ளதாகவும் இன்னும் ஒரு வாரத்துக்குள் அவர் சிறைச் பக்கம் 14

## புதிய பிரதம நீதியரசர் பதவிக்கு ஜயந்த ஜயசூரிய வரும் வாய்ப்பு





கொழும்பு, செப்.03

உயர் நீதிமன்றின் புதிய பிரதம நீதியரசராக, தற்போதைய சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரியவை பக்கம் 14

## கூட்டு எதிரணியின் போராட்டத்தால் கொழும்பு வெள்ளியன்று ஸ்தம்பிக்கும்

கொழும்பு,செப்.03

நல்லாட்சி அரசாங்கத்துக்கு எதிரான கூட்டு எதிரணியின் ஆர்ப்பாட்ட நடவடிக்கையால் நாளை மறுதினம் தலைநகர் கொழும்பு ஸ்தம்பிக்கலாம் என செய்தி ஏஜென்ஸிகள் தெரிவிக்கின்றன.

கூட்டு எதிரணிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இது தொடர்பிலான முக்கிய கலந்துரையாடல் ஒன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாளை மாலை கொழும்பு, பக்கம் 14

## வடக்கில் இ.போ.ச. சேவைகள் நேற்று நள்ளிரவுடன் நிறுத்தம்

கொழும்பு, செப்.03

இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் நேற்று நள்ளிரவு முதல் சேவையில் ஈடுபடவில்லை.

சம்பளப் பிரச்சினையை முன்வைத்து ஊழியர்கள் பக்கம் 14

## ஆஸ்பத்திரியில் அமைச்சர் அனந்தி

யாழ்ப்பாணம்,செப்.03

வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் நேற்று வீட்டில் இருக்கும்போது திடீரென மயக்கமடைந்து விழுந்தார் என்றும் அதனையடுத்து அரச வைத்தியசாலையில் பக்கம் 14

# ஜெனீவா நெருக்கடியிலிருந்து தப்பிக்கவே ஜனாதிபதி செயலணியை நிறுவியது அரசு

## கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு இது புரியாதமை விந்தை என்கிறார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், செப்.03

பொருளாதார ரீதியாக நாங்கள் வடக்கு, கிழக்கைக் கவனித்து வருகின்றோம் என்று ஜெனீவாவில் இலங்கை அரசு கூற இந்த ஜனாதிபதி செயலணியைப் பாவித்து வருகின்றது என்பதைக் கூட்டமைப்பு நாடாளுமன்ற அங்கத்தவர்கள் உணராதிருப்பது விந்தையாக உள்ளது.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

நேற்றுத் தாம் வெளியிட்ட கேள்வி – பதில் அறிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை பக்கம் 03



## அடுத்த பட்ஜெட்டில் சம்பள அதிகரிப்பு?

இன்னும் இரண்டு மாதங்களில் அறிவிக்கப்படவுள்ள 2019 வரவுசெலவு திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது.

அது தொடர்பாக அரசாங்கம் விசேட கவனம் செலுத் பக்கம் 14

## பாதுகாப்புக் கருத்தரங்கை புறக்கணித்த பொன்சேகா

கொழும்பு, செப்.03

இராணுவம் நடத்திய கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கை, அமைச்சரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா புறக்கணித்தார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. பக்கம் 14




# இந்த வாரத்தில் கைதாவார் அட்மிரல் விஜேகுணரத்ன!

கொழும்பு, செப். 03

இலங்கையின் மிக மூத்த படை அதிகாரியான பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி, அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன இந்த வாரம் கைது செய்யப்படுவார் என்றும் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் ஆங்கில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான கடற்படை புலனாய்வு அதிகாரி நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல அட்மிரல் விஜேகுணரத்ன உதவினார் என்பதற்கு புதிய ஆதாரங்கள் தம்மிடம் இருக்கின்றன எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த புதன்கிழமை கோட்டே நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து, அவரைக் கைது செய்யுமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இலங்கை இராணுவத்தின் நான்கு நட்சத்திர ஜெனரல் ஒருவருக்கு இணையான பதவியில் இருக்கும், அட்மிரல் விஜேகுணரத்னவைக் கைது செய்ய உத்தரவிடப்பட்ட பின்னரும், அவர் வெளிநாட்டில் இருந்து வந்த பிரதிநிதிகளைச்



சந்திக்கும் பணியில் ஈடுபட்டார்.

அவருக்கு எதிராக நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட அன்று முன்னாள் கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் றொகான் தளுவத்தவின் இறுதிச்சடங்கில் பங்கேற்றார்.

நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேபாளத்தில் நடைபெற்ற பிம்ஸ்ரெக் மாநாட்டில் பங்கேற்க நாட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றிருந்தார். இதனால் கைது நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் நேபாளத்தில் இருந்து நாடு திரும்பியுள்ளார்.

இந்த நிலையில் அவர் இந்த வாரம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட வாய்ப்புகள் இருக்கின்றன எனக் கூறப்படுகிறது.

அதேவேளை, அட்மிரல் விஜேகுணரத்னவைக் கைது செய்வதை அரச உயர்மட்டத்தில் உள்ள ஒருவர் தடுத்து வைத்துள்ளார் என மற்றொரு செய்தி கூறுகிறது.

இன்றுடன் அட்மிரல் விஜேகுணரத்னவின் பதவிக்காலம் முடிவடையவுள்ளது. கௌரவமாக அவரை வழியனுப்பி வைத்த பின்னர், அவர் கைது செய்யப்படும் வாய்ப்புகள் உள்ளன என்றும் கூறப்படுகிறது.

ஏற்கனவே 2016ஆம் ஆண்டு அட்மிரல் விஜேகுணரத்ன, இலங்கை கடற்படைத் தளபதியாக இருந்த போது, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஊடகவியலாளர் ஒருவரைத் தாக்க முயன்ற சம்பவத்தில் அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், அரசியல் தலையீடுகளால் அவர் காப்பாற்றப்பட்டார்.

அத்துடன், அதற்குப் பின்னரே ஜனாதிபதியால் அட்மிரலாகப் பதவி உயர்த்தப்பட்டு, பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அடுத்த ஆண்டுக்கான பாடப்புத்தக விநியோகத்தின் முதல் கட்டம் ஆரம்பம்!

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருடத்திற்கான பாடப்புத்தக விநியோகத்தின் முதற்கட்டப் பணி மூன்றாம் தவணை பாடசாலை ஆரம்பத்துடன் முன்னெடுக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

419 பாடங்களுக்கான 3 கோடி 80 லட்சம் பாடப்புத்தக்கங்கள் இம்முறை அச்சிடப்பட்டுள்ளன. மேல் மாகாணப் பாடசாலைகளுக்கான பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்படுகின்றன என கல்வி வெளியீட்டுப் பிரிவின் ஆணையாளர் நாயகம் திருமதி பத்மினி நாலிகா வெலிவத்த தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக, உயர்தர மற்றும் உயர்கல்விக்கான ஆசிரியர்களுக்குத் தேவையான மேலதிகமாக 359 பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கலஹா வைத்தியசாலையை திறக்குமாறு மக்கள் ஆர்ப்பாட்டம்!

குழந்தையொன்று உயிரிழந்த சம்பவத்தினால் கால வரையறையின்றி மூடப்பட்டிருக்கும் கலஹா வைத்தியசாலையை மீண்டும் திறக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி கிராமவாசிகள் நேற்று கலஹா நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 28 ஆம் திகதி முதல் இதுவரையில் வைத்தியசாலை மூடப்பட்டதன் காரணமாக பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளோம் எனக் கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர்கள் வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டதன் விளைவாக வைத்தியர்கள் இல்லாத நிலையில் வைத்தியசாலையை மூடி வைத்துள்ளனர் என ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த வைத்தியசாலை மூடப்பட்டுள்ளதனால், அவசரசிகிச்சை பெறவேண்டியுள்ள நோயாளி ஒருவர் 10 கிலோமீற்றர் தூரம் சென்று தெல்தொட்ட வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது என ஆர்ப்பாட்டக்காரர்கள் முறைப்பட்டுள்ளனர்.

## இ.போ.ச. ஊழியர்கள் போராட்டத்துக்கு முஸ்தீபு!

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பித்துள்ள ருகுணு பகுதி இ.போ.ச. பஸ் ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பில் 11 டிபோ ஊழியர்கள் தற்பொழுது இணைந்துள்ளன.

இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்கப்படாவிடின், ஏனைய பகுதிகளிலுள்ள ஊழியர்களையும் இணைத்துக் கொள்ளவுள்ளோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திர தேசிய போக்குவரத்து சேவை ஊழியர் சங்கத்தின் செயலாளர் பந்துல ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இ.போ.சபை தலைவர் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையில் நேற்று பிற்பகல் 2.00 மணிக்கு காலி பிரதேச சபைக்காரியாலயத்தில் இது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது என பந்துல ரத்நாயக்க மேலும் கூறியுள்ளார்.

## ரஷ்யாவிடம் இருந்து ஏ.கே.47 ரக 2,568 துப்பாக்கிகள் கொள்வனவு

இலங்கையின் வனவாழ் உயிரினங்கள் திணைக்களத்துக்கு 4 கோடியே 20 லட்சம் ரூபா செலவில் 2 ஆயிரத்து 568 ஏ.கே - 47 துப்பாக்கிகளைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

யானைகள் கொல்லப்படுவதில் இருந்து பாதுகாப்பதற்கும், மனிதர்கள் - யானைகள் இடையிலான மோதல்களில் இருந்து மனிதர்களை பாதுகாப்பதற்கும் என்றே இந்த துப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

வனவாழ் உயிரினங்கள் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

சீனத் தயாரிப்பான ரி - 56 ரகத் துப்பாக்கிகளை விட, ரஷ்யத் தயாரிப்பான ஏ.கே.47 துப்பாக்கிகள் தரமானவை என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பரிந்துரைத்துள்ளார். இதற்கமைய, 2,568 ஏ.கே. 47 துப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இந்த ஆண்டில், தலா 16 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில், 1500 துப்பாக்கிகள் 2 கோடியே 40 லட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும். அடுத்த ஆண்டு 1068 துப்பாக்கிகள், தலா 17 ஆயிரம் ரூபா வீதம், ஒரு கோடியே 80



லட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும்.

இவற்றில், , 2,334 துப்பாக்கிகள், வன உயிரியல் பூங்காக்களில் உள்ள சிறிய பராமரிப்புக் குழுக்களுக்கு வழங்கப்படும். 234 துப்பாக்கிகள், உதவி வனத்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்படும்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில், வன உயிரியல் திணைக்கள அதிகாரிகள், தமிழ் மக்களின் பாரம்பரிய இடங்களை அபகரிக்கின்றனர் என்றும், அங்கு வாழும் மக்களை அச்சுறுத்தி வருகின்றனர் என்றும் அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், வன வாழ் உயிரினங்கள் திணைக்கள அதிகாரிகளுக்கு துப்பாக்கிகள் வழங்கப்படுவது, தமிழ் மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

## தேர்தல் காலப்பகுதியில் இடம்பெறும்

# நிதி வீண்விரயம், மோசடிகளை கட்டுப்படுத்த புதிய சட்டங்கள்!

தேர்தல் காலப்பகுதியில் பெரிய அளவில் இடம்பெறும் நிதி வீண்விரயம், மோசடி, ஊழல் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அரச நிதி மற்றும் நாட்டின் நிதி பெரிய அளவில் தேர்தல் காலப்பகுதியில் மக்கள் பிரதிநிதிகளால் ஒதுக்கீடு செய்யப்படுகின்றமை தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் பேசப்பட்டு வருகிறது. இது தொடர்பாக ஊழல் மோசடி எதிர்ப்பு அமைப்பு பல்வேறு மட்டங்களில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

இதனால் இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கவனஞ் செலுத்தி ஜனாதிபதி மற்றும் அரசின் அனுமதியுடன் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த இருப்பதாக ஆணைக்குழுவின் சட்டத்துறைக்கான பணிப்பாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

இது தொடர்பான திருத்தச் சட்டமூலம் தற்போது அரச சட்ட திருத்த தயாரிப்புப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவத்தின் சிகை அலங்கார நிலையம்; எமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்பு

அழகக கூட்டுறவுச் சங்கம் குற்றச்சாட்டு




இராணுவத்தினர் சிகை அலங்கரிப்பு நிலையம் நடத்துவதால் தமது வாழ்வாதார தொழில் நடவடிக்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என வவுனியா மாவட்ட அழகக கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட அழகக கூட்டுறவுச் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வை வருமாறு –

வவுனியா, பம்பைமடு பகுதியில் இராணுவத்தினர் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றை அமைத்து சிகை அலங்கார வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஞாயிறு மற்றும் விசேட விடுமுறை தினங்களிலும் குறித்த சிகை அலங்கரிப்பு நிலையத்தை திறந்து வேலை செய்வதுடன், அங்கு சென்று சிகை அலங்காரம் செய்பவர்களிடம் குறைந்தளவிலான கட்டணங்களையும் அறவிட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக எமது சங்க கட்டுப்பாடுகளுக்கு அமைவாக செயற்படும் எமது சங்கத்தின் கீழ உள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களை நடத்துவோர் பாதிப்படைந்துள்ளனர்.

அவர்களது நாளாந்த வாழ்வாதாரம் கூட பாதிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தால் நடத்தப்படும் சிகை அலங்கரிப்பு நிலையங்களை மூட வேண்டும் என வடமாகாணம் தழுவிய ரீதியில் அழுத்தம் கொடுத்திருந்த நிலையில், சில மாதங்கள் குறித்த இராணுவத்தின் சிகை அலங்கரிப்பு நிலையம் மூடப்பட்டு இராணுவத் தேவைக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

ஆனால், தற்போது மீண்டும் திறக்கப்பட்டு பொது மக்களுக்கான வேலைகளையும் செய்துவருகின்றனர். இதனால் போரால் பாதிக்கப்பட்ட நிலையில் குறைந்தளவிலான முதலீட்டில் சிகை அலங்கரிப்பு நிலையங்களை நடத்தி வரும் பலர் பாதிப்படைந்துள்ளனர்.

எனவே, வடமாகாண சபை மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி எமக்கு ஒரு நியாயமான தீர்வைப் பெற்றுத் தருவதுடன் எம்மை நிம்மதியாக வாழ வழியை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க - 100)

# தமிழ் மக்களின் போராட்டத்தை காட்டிக் கொடுத்தார் சுமந்திரன்

## கல்வி அமைச்சர் சர்வேஸ் காட்டம்

– எஸ்.நிதர்ஷன் –

புதிய அரசமைப்பில் சமஷ்டி தேவையில்லை, மாகாண சபை முறைமையில் சிறு மாற்றம் செய்தாலே போதுமானதாக இருக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியிருக்கும் கருத்து தமிழ் மக்களது எழுபதாண்டு காலப் போராட்டத்திற்குச் செய்த துரோகம் எனவும் அப்போராட்டத்தையே காட்டி கொடுத்த செயற்பாடு எனவும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி சர்வேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு செய்தியாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

காலியில் இடம்பெற்ற கூட்டத்திலே தமிழ் மக்களுக்கு சமஷ்டி தேவையில்லை என்று கூறிவிட்டு, பின்னர் தான் அவ்வாறு கூறவில்லை, சமஷடி என்ற பெயர்ப் பலகை வேண்டாம் என்றே கூறினேன் என மறுத்து சுமந்திரன் கூறியுள்ளார். இது முழுப் பொய். இங்கே சுமந்திரனுக்கு பொய் கூறுவது என்பது எதுவும் புதிதானதுமல்ல.

ஏற்கனவே கனடாவில் பத்திரிகையொன்றுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டுவிட்டது என கூறியிருந்தார். இது தொடர்பாக நாம் கட்சி கூட்டத்திலே கேட்டபோது உங்களுக்கு வேண்டுமானால் அது தெரியாமல் இருக்கலாம் என்று கூறியவர். இவ்வாறு பொய் கூறுவது அவருக்கு இயல்பானதாக இருக்கலாம். ஏனெனில் அவர் ஒரு சட்டத்தரணி.

எழுபதாண்டு காலத் தமிழர்களது போராட்டத்தில் முன்னர் சமஷ்டிக் கோரிக்கையை நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் முன்வைத்து போராடினார்கள். பின்னர் தனிநாட்டு கோரிக்கையை முன்வைத்து ஆயுதப் போராட்டம் இடம்பெற்றது. அதன் பின்னர், போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வே எமது இனப் பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்ற கொள்கையை முன்வைத்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தேர்தல்களில் வாக்கு பெற்று வருகின்றது.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை எது என்பதை மறந்து அல்லது அதற்கு மாறாக சுமந்திரன் தெரிவித்திருக்கின்ற கருத்தானது தமிழர்களது எழுபது ஆண்டு கால போராட்டத்திற்கு துரோகம் இழைத்தது மட்டுமல்லாது, அத னைக் காட்டி கொடுத்து இழிவுபடுத்தியுமுள்ளது.

தமிழரசுக் கடசியை சேர்ந்த எம்.ஏ.சுமந்திரன் கடந்த காலத்தில் நாடாளுமன்றத்தில் வைத்து பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுக்கத் தமிழ் மக்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்ற கருத்தை கூறியிருந்தார் என்பதும் மறுக்க முடியாதது.– என்றார்.

## ஜெனீவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:–

கேள்வி – நீங்கள் சம்பந்தனுக்கு எழுதிய கடிதத்தில் கோரப்பட்டதற்கு மாறாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிவசக்தி ஆனந்தன் தவிர்ந்த,நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஜனாதிபதியின் செயலணிக் கூட்டத்தில் கலந்துள்ளார்களே. அது பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்: எனக்கு சந்தோஷந்தான்.

கேள்வி: அது எப்படி?

பதில்: எனக்கு மட்டுந்தரப்பட்ட ஓர் அரசியல் மற்றும் பொருளாதார விருத்தி சம்பந்தமான சலுகையை நான் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டேன் என்று தெரிகின்றது. இதன்போது எமது அரசியல் கருத்து வேறுபாடுகள் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன.

எதனைக் கூறச் சிரமப்பட்டேனோ அதனை இந்த நிகழ்வு தெட்டத் தெளிவாக்கிவிட்டது.

முன்னர் அரசு தருவதை ஏற்று எங்கள் இடங்களை நாங்கள் அபிவிருத்தி செய்யவேண்டும் என்று சில தமிழ்க் கட்சித் தலைவர்கள் கூறியபோது அதனை எதிர்த்தவர்கள் எமது கட்சியினர் தான். அவர்களைத் 'துரோகிகள்' என்று அழைத்தவர்களும் அவர்கள் தான். அந்தத் 'துரோகி'களுடன்தான் இப்போது எமது கட்சியினர் உள்ளூராட்சிச் சபைகள் பலவற்றில் கூட்டு வைத்துள்ளனர். பொருளாதார விருத்தியே எமக்குத் தற்போது வேண்டும் என்ற கருத்திருந்திருந்தால் நாங்கள் மற்றவர்கள் அரசின் ஊடாகப் பொருளாதார விருத்தியைப் பெறுவதைத் தடை செய்திருக்கக்கூடாது. 'துரோகிகள்' என்று அவர்களை அடையாளப்படுத்தியிருக்கக்கூடாது. மாகாணசபை கலையை இரண்டு மாதங்கள் உண்டு. நாடாளுமன்றம் கலைய 2 வருடங்கள் உண்டு. இந் நிலையில் செயலணியை நியமித்து செயலாற்ற முன் வந்திருப்பது அரசியல் காரணங்களுக்காக என்று தெரிகிறது. அதேபோல் அதில் சேர்ந்து செயலாற்ற எம்மவர்கள் முன்வந்திருப்பதும் அரசியல் காரணங்களுக்காகத்தான் என்று தெரிகிறது. என்னைப் பொறுத்த வரையில் கட்சி அரசியல் ஒரு பொருட்டல்ல. எவ்வளவு வேகமாகஅரசியல்தீர்வைப்பெற்றுத் தரமுடியும் என்பதே எனது கரிசனை. நாங்கள் யாவரும் ஒன்றிணைந்து 'இராணுவத்தினருடன் சேர்ந்த தெற்கத்தையப் பெரும்பான்மையினரின் செயலணி ஒரு அரசியல் செயல்பாடே' – என்று கூறி எமக்கு அரசியல் தீர்வே தற்போது முக்கியமென்ற கருத்தை முன்வைத்திருந்தால் தமிழ் மக்களின் அரசியல் பல மற்ற நிலையும் தமிழ் மக்களின் உரித்துக்களை வழங்க அரசு பின்னிற்கும் பாங்கும் வெளிக் கொண்டுவரப்பட்டிருப்பன. உலக நாடுகளுக்கு இதை எடுத்துக் காட்டியிருக்கலாம். தற்போது தம்மைத்தாழ்த்தி என்னை ஏற்றி விட்டிருக்கின்றார்கள் எனது கட்சியினர்.

எமது கொள்கை ரீதியான வேறுபாடுகள் வெளிக் கொண்டு வரப்பட்டுள்ளன. உடனே அரசியல்தீர்வு அவசியம் என்று கூறிய எனது வாசகம் சம்பந்தன் இந்த வருட முடிவுக்கு முன்னர் அரசியல் தீர்வு என்று கூறியதன் பிரதிபலிப்பேயாகும். இப்போது அரசியல் தீர்வும் கிடைக்கப் போவதில்லை. பொருளாதார விருத்தியும் எம்மவர் கைவசம் இருக்கப் போவதுமில்லை. செயலணியின் 46 பேரே காய்களை நகர்த்துவார்கள்.

ஆனால், ஜனாதிபதிக்கு நான் எழுதிய கடிதத்தில், நீங்கள் உங்கள் ஒரு தலைப்பட்சமான பொருளாதார விருத்திகளை உங்களுக்கு வேண்டுமென்றால் செய்துகொண்டு போங்கள். ஆனால் என்னை அதற்குள் உள்நுழைக்காதீர்கள் என்றே கூறியிருந்தேன். பொருளாதாரப் பயன்களைக் காட்டி எமது அரசியல் தீர்வைத் தாமதப்படுத்துவதே அரசின் எண்ணம். அத்துடன் பொருளாதார ரீதியாக நாங்கள் வடக்கு, கிழக்கைக் கவனித்து வருகின்றோம் என்று ஜெனீவாவில் அரசு கூற, இந்தச் செயலணியைப் பாவித்து வருகின்றது என்பதை எமது நாடாளுமன்ற அங்கத்தவர்கள் உணராதிருப்பது விந்தையாக உள்ளது.

முதற் கூட்டத்திலேயே ஜனாதிபதி முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைக்கப் பார்த்தார். அதனால் தான் அன்றே விவரங்கள் எடுத்து அடுத்த நாள் தினக்குரலில் சிங்களக் குடியேற்றம் உண்மையில் நடந்துள்ளதென்பதை அனுமதிப் பத்திரமொன்றைப் பிரசுரித்ததால் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டினேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னை உதாசீனம் செய்திருப்பினும் காணிகள் சம்பந்தமான சம்பந்தனின் கூற்றை ஜனாதிபதிக்கு மெய்ப்பிக்கவே இந்த உடன் நடவடிக்கையை எடுத்தேன்.

பக்கம் 14

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் ஒரு விடயம் தொடர்பில் நேற்று நமது நாளிதழ் ஒன்றில் முற்பக்கத்தில் ஒரு செய்தி பார்த்தேன்.

*"வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கும் எனக்கும் இடையில் 7 ஆம் திகதி சந்திப்பு நடைபெறவுள்ளதாக ஊடகங்களைப் பார்த்துத்தான் நான் அறிந்து கொண்டேன்."*

– என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார் என அந்தச் செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

சம்பந்தனின் கட்சிக்காரர் நடத்தும் பத்திரிகை அது. அதனால் சம்பந்தன் கூறாதவற்றை அந்தப் பத்திரிகை கூறியிருக்கும் என்று நான் நம்பவில்லை. அப்படிக் கூறவேண்டிய தேவையும் அதற்கு இல்லை.

அப்படியானால், சம்பந்தனுக்கு அந்தச் சந்திப்புக்குத் தாம் முதல்வர் விக்னேஸ்வரனுடன் சேர்ந்து நாள் குறித்துக் கொண்டமை நினைவில் தப்பிப் போய்விட்டதா என்ற சந்தேகம் எனக்கு வந்து விட்டது.

தமிழர் விவகாரத்தில் முக்கிய தலைவர்கள் எல்லாம் மூப்பு அடிப்படையில் முன்னிற்பவர்கள் என்பது சில விடயங்களில் பிளஸ்பொயிண்ட். சில வகையில் மைனஸ் பொயிண்ட்.

தமிழர் தரப்பில் சம்பந்தனுக்கு வயது 85.

வடக்கு முதல்வர் விக்னேஸ்வரனுக்கு இப்போது வயது 78. அடுத்த மாதம் 23 ஆம் திகதி தற்போதைய வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் காலவதியாகும் தினத்தன்று அவருக்கு வயது 79 ஆகிவிடும். அன்றுதான் அவருக்குப் பிறந்ததினம். அந்தப் பிறந்த தினத்துக்கு அவருக்குக் கிடைக்கப் போகின்ற பரிசு 'முன்னாள் வடக்கு முதல்வர்' என்ற நாமமாக இருக்கலாம்.

அதே வரிசையில் மாவை சேனாதிராசாவுக்கு வயது 76.

மூவருமே முக்கால் 'செஞ்சுரி' போட்டவர்கள்.

என்னதான் வயது எகிறினாலும், நினைவாற்றல் தப்பாதவர் சம்பந்தன். நாடாளுமன்றத்தில் பழைய விடயங்களைக் குறிப்பிட்டுப்பேசும்போது கூட விலாவாரியாகப் பழைய திகதிகளைக் குறிப்பிடுவதற்கு அவர் தவறுவதில்லை. இந்த நினைவாற்றலை தளபதி அமிர்தலிங்கத்திடமும் நாம் கண்டிருக்கின்றோம். அவரும் கூட, நாடாளுமன்றத்தில் பழைய சம்பவங்களைக் குறிப்பிடும் போது, விலாவாரியாகச் சரியான திகதிகளை அடுக்கத் தவறுவதில்லை. 'இன்ரநெற்', 'இணைய வசதிகள்' இல்லாத அந்தக் காலத்தில் அவர்களது மூளை பல ஜிகாபைட்ஸ் மெமரி கொண்டவையாக இருந்திருக்கும் போல. அந்த அணியைச் சேர்ந்தவர்தான் சம்பந்தனும். அவரும் நினைவாற்றலைத் தவறவிட வாய்ப்பில்லை.

அப்படியானால் *"ஊடகங்களைப் பார்த்த பின்பே விக்கியை நான் சந்திப்பது குறித்து நான் அறிந்து கொண்டேன்."* – என்று சம்பந்தன் ஏன் கூறினார்?

முதல்வர் விக்னேஸ்வரன் சம்பந்தனைச் சந்திப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டார் என்பது உண்மையே. அதை அறிந்து கடந்த வாரத்துக்கு முந்திய வாரத்தில் ஒருநாள் (பெரும்பாலும் சனிக்கிழமையன்று) விக்னேஸ்வரனுக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தார் சம்பந்தன்.

வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதியின் செயலணிக் கூட்டத்தில் பங்குபற்றும் முடிவை கூட்டமைப்பு எம்.பிக்கள் எடுத்திருக்கின்றமை குறித்தும், அதற்கான காரணங்களையும் அந்தத் தொலைபேசி அழைப்பின் போதே சம்பந்தன், முதல்வர் விக்னேஸ்வரனுக்கு விளங்கப்படுத்த முற்பட்டார்.

இது விடயத்தில் தமது கருத்தை எழுத்தில் சம்பந்தனுக்கு ஏற்கனவே தெரிவித்துவிட்ட முதலமைச்சர் விக்னேஸ்வரன், அதன் காரணமாக இவ்விடயத்தை ஒட்டி தொலைபேசியில் சம்பந்தனுடன் விவாதிக்க முயலாமல், எல்லாவற்றுக்கும் அப்படியா, ஆமா என்று தலையாட்டி வைத்தார்.

அப்போதுதான் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை நேரில் சந்தித்துப் பேசுவோமே என்ற யோசனையைப் பிரேரித்தார் சம்பந்தன்.

ஆனால் தமக்கு வேறு நிகழ்வு ஒழுங்கு இருப்பதாகக் குறிப்பிட்ட முதல்வர், எதிர்வரும் ஐந்தாம் திகதி வழக்குக்காகக் கொழும்புக்கு வருவேன், அப்போது சந்திப்போம் என்று ஒரு பதில் யோசனையைச் சொன்னார்.

அந்தத் தினத்தில் திருகோணமலைக் காளி கோவிலுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் அவரைச் சந்திக்க இயலாதிருப்பதாகச் சம்பந்தன் கூறினாராம்.

அதையடுத்து, *"எனக்கு 7 ஆம் திகதியும் டெனிஸ்வரன் தொடுத்த வழக்கு உண்டு. அதனால் அன்றும் கொழும்பில் நிற்பேன். அன்று சந்திப்போம்."* – என்றார் முதல்வர். இணங்கினார் சம்பந்தன். சம்பந்தனின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்திப்பு நடப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வளவும் நடந்தமையை ஓர் ஊடகவியலாளனாக என்னால் உறுதிப்படுத்த முடிந்தது.

இப்படியிருக்கையில், தானும் சம்பந்தப்பட்ட சந்திப்புக் குறித்து, ஊடகங்களில் பார்த்துத்தான் தாம் அறிந்து கொண்டார் என்று சம்பந்தன் ஏன் கூறினார்? எனக்குப் புரியவில்லை. அவர்தான் தெளிவுபடுத்த வேண்டும்.

'கூட்டமைப்புத் தலைமை தோல்வி கண்டு விட்டது.' என்று பகிரங்கமாக முதலமைச்சர் கூறியமையினால், தம் மீதான நேரடித் தாக்குதலாக இதனைக் கருதி, இனிமேல் இப்பேற்பட்டவருடன் என்ன சந்திப்பு வேண்டிக்கிடக்கின்றது என்று எண்ணி, சம்பந்தன் அப்படி நடந்திருப்பாரோ என்று தோன்றியது.

ஆனால் அரசியலில் பெரும் முதிர்ச்சியும், பக்குவமும் கொண்ட சம்பந்தன் விடயத்தை இப்படிக் கையாள முற்பட்டிருக்க மாட்டார் என்றே என் மனம் கூறுகின்றது. அப்படியானால், இப்படி ஒரு செய்தி வெளியானமை எங்ஙனம்? மலிந்தால் சந்தைக்கு வரும் தானே. அது வரை பொறுத்திருப்போம்.

★ ★ ★

இதுவும் ஓர் ஊடகச் செய்தி சம்பந்தமானதுதான். பிரசுரமான செய்திகளால் பல விளைவுகளை, அனர்த்தங்களை, அழுத்தங்களை எதிர்கொண்ட அனுபவம் எனக்கு நிறையவே உண்டு.

காலத்துக்குக் காலம் இந்த அழுத்தங்களும், நெருக்குவாரங்களும் வெவ்வேறு வடிவத்தில் வெவ்வேறு கோணத்தில் வரும்.

சில சமயங்களில் நேரடியாகக் குண்டுத் தாக்குதலாகவோ அல்லது துப்பாக்கிச் சூடாகவோ அல்லது விநியோகப் பையன்களின் மோட்டார் சைக்கிள்கள் எரிப்பாகவோ அது கட்டவிழும். அந்தக் காலம் இப்போது மலையேறிவிட்டது.

இப்போதெல்லாம் ஆக மிஞ்சியது, தொலைபேசி அச்சுறுத்தலாகத்தான் இருக்கும். எல்லை மீறி கை, கால் நீட்டித் தாக்குதல் நடத்தும் சம்பவமாக அது விரிவடையலாம். இல்லாவிடின் தற்போதைய நாட்டுச் செல்நெறிக்கு அமைய வாள் வெட்டால் அது உச்சமடையலாம்.

ஆனால், வேறு வடிவங்களிலும் கூட இந்த அழுத்தம் வரலாம். அதை அவதானமாகச் சமாளித்து எதிர்கொள்வது ஊடகங்களின் மதி நுட்பத்தைப் பொறுத்தது.

நேற்று முன்தினமும் கட்டவிழ்ந்த ஒரு விடயத்தை ஒட்டி புதிய அழுத்த அணுகுமுறை முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. அது சட்டரீதியானது என்று கூறப்பட்டாலும் கூட அந்தச் சட்டச் சிக்கல் மோசமான விளைவுகளை ஊடகத்தரப்புகளுக்குத் தரக்கூடியது.

மேற்படி ஊடகச் செய்தியால் பாதிப்புற்றோர் என்று கூறிக் கொள்ளும் தரப்பினர், சம்பந்தப்பட்ட செய்திக்கு ஆவேசமும் கண்டனமும், எதிர்ப்பும் வெளியிட்டமைக்கு மேலதிகமாக, அதற்காக அந்த ஊடக நிறுவனத்துக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடும் செய்திருக்கின்றனர்.

சமூகங்கள், இனங்களுக்கு இடையில் குரோதத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைக்கு எதிரானது என்ற பெயரில் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டத்தின் கீழேயே அந்த முறைப்பாடு செய்யப்படுகின்றதாக நேற்றிரவு அறிந்தேன். 'குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச பொருதனை' எனப்படும் 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழேயே இந்தப் பொலிஸ் முறைப்பாடு செய்யப்படுகின்றது.

ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு எதிராகத் தாம் முன்னெடுத்த நடவடிக்கைகளை பின்னர் நியாயப்படுத்துவதற்கு மஹிந்தர் அரசு கொண்டு வந்த மிகச் சிக்கலான சட்டம் இது.

திஸநாயகம் மீது பாய்ந்த இந்தக் கொடூரம் இப்போது நடக்காது என்பதற்கு உத்தரவாதம் ஏதுமில்லை. சம்பந்தப்பட்டோர் முன்னெச்சரிக்கை அடைவது நல்லது.

-மின்னல்

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கட்சித் தலைவர்களுக்கு புதுடில்லியின் அழைப்பு

இலங்கை விவகாரத்தில் ஏதோ இராஜதந்திர காய் நகர்த்தல்களை மீளவும் முனைப்பாகப் புதுடில்லி ஆரம்பித்திருப்பதாகத் தோன்றுகின்றது.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கியதான புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் கணிசமான அளவு முன்னேறிய நிலையில் அது முட்டுக்கட்டை கட்டத்தை அடைந்திருப்பதாகத் தோற்றும் வேளை இது.

தொடர் கலந்துரையாடல்கள், விவாதங்கள், பல தரப்பு ஊடாட்டங்கள், பகீரதப் பிரயத்தன முயற்சிகள் என்ற நீண்ட எத்தனத்துக்குப் பிறகு புதிய அரசமைப்புக்கான நகல் வடிவத்தை எட்டும் அளவுக்கு விவகாரம் முன்னேறியிருக்கின்றது என்பது தெரிந்ததே.

இதற்கு அப்பால் விவகாரம் முன்நகர்வதற்கான அரசியல் சூழல் இல்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எதிர்வரும் 06 ஆம் திகதி அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழு மீண்டும் கூடும் போது இது விடயததில் நிலைமை தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.

இதுவரை – நகல் யாப்பு வடிவத்தை எட்டு நிலைமை வரும் வரை – இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான கட்சிகள் இந்த முயற்சியை எதிர்க்கவில்லை. அந்த முயற்சிகளுடன் சேர்ந்தே அவையும் பயணித்திருக்கின்றன.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான கலந்துரையாடல்களில் இருந்து விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி ஒரு தலைப்பட்சமாக வெளியேறிவிட்டது எனினும், கூட்டு எதிரணியின் ஏனைய கட்சிகள் உட்பட மிகுதி அனைத்துக் கட்சிகளும் இதுவரை இந்த அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் பங்களித்தே வந்துள்ளன.

ஆனால், புதிய அரசமைப்புக்கான முயற்சியின் முக்கிய கட்டமாக, புதிய அரசமைப்பு நகல் வடிவம் தயார் என்ற நிலைமை வந்தவுடன், அந்த முயற்சியை எதிர்க்கும் கடும் நிலைப்பாட்டுக்கு கூட்டு எதிரணி உட்பட்ட கட்சிகள் மாறி விடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான கலந்துரையாடல்களில் இருந்தே பிரதான எதிர்க்கட்சிகள் வெளியேறிவிடும் அரசியல் சூழலே காணப்படுகின்றன என்று கருதப்படுகின்றது.

இந்தச் சமயத்திலேயே இந்தியத் தரப்பின் இராஜதந்திரம் இதற்குள் நேரடியாக நுழைக்கின்றதோ என்ற சந்தேகம் இயல்பாக எழுகின்றது.

இந்தியாவை ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் மக்களவை உறுப்பினர் சுப்பிரமணியன் சுவாமி விடுத்த அழைப்பை ஏற்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த வாரம் புதுடில்லி செல்கிறார். அங்கு எதிர்வரும் 12 ஆம் திகதி இலங்கை – இந்திய உறவு தொடர்பாக பொது நிகழ்வு ஒன்றில் அவர் உரையாற்றவிருக்கின்றார். இந்த நிகழ்வை ஒட்டி இரண்டு அல்லது மூன்று நாள்கள் அவர் புதுடில்லியில் தங்கியிருக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சமயத்தில்தான் இரு தரப்பு உறவை வளர்ப்பதற்கான நடவடிக்கை என்ற பெயரில் இலங்கையின் அனைத்துக் கட்சித் தலைவர்கள் குழு ஒன்றை புதுடில்லிக்கு அழைத்திருக்கின்றது பாரத அரசு.

சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் செல்லும் இக்குழுவில், எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் (தமிழ்க் கூட்டமைப்பு), சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல (ஐ.தே.கட்சி), சிரேஷ்ட அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா (சுதந்திரக் கட்சி), தினேஷ் குணவர்த்தன (கூட்டு எதிரணி), அமைச்சர் ரிஷாத் பதியுதீன் (அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்), அமைச்சர் ரவூப் ஹக்கீம் (ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்), விஜித ஹேரத் (ஜே.வி.பி.), அமைச்சர் மனோ கணேசன் (தமிழர் முற்போக்கு முன்னணி), டக்ளஸ் தேவானந்தா (ஈ.பி.டி.பி.) ஆகிய தலைவர்களே இரு தரப்பு உறவுகள் குறித்து ஆராய இலங்கை அரசினால் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லியில் தங்கிருக்கும் அதே காலத்தில் இக் குழுவினரும் தங்கியிருப்பர் என்பது மட்டுமல்லாமல் இக்குழுவினர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் சந்தித்துப் பேசுவர் என்றும் கூறப்படுகின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் அதன் மூலமான தீர்வு முயற்சிகள் தீர்க்கமான கட்டத்தை அடைந்திருக்கும் இச்சமயத்தில் இவ்வாறு இலங்கையின் அனைத்துக் கட்சிகளினதும் தலைவர்களை ஒன்றாகக் கூட்டி வந்து புதுடில்லியில் தங்க வைத்து பிரதமர் மோடி அவர்களுடன் உரையாடுவது என்பது மீண்டும் இந்திய இராஜதந்திரம் இந்த விடயத்துக்குள் முனைப்புடன் மூக்கை நுழைக்கின்றது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

# தமிழர் நலன் கருதி தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஐக்கியப்பட வேண்டும்

## தர்மலிங்கம் நினைவு நிகழ்வில் சித்தார்த்தன் வலியுறுத்து



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களின் நலனுக்காக தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து ஒற்றுமையாகப் பயணிப்பது அவசியமாகும். அவ்வாறு தமிழ்க் கட்சிகள் இணைந்து செயற்படுவதனூடாகவே தமிழ் மக்கள் பலமாக இருந்து உரிமைகளை வென்றெடுக்க முடியுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான சித்தார்த்தன் தெரிவித்தார்.

சித்தார்த்தனின் தந்தையாரான தலைவர் தர்மலிங்கத்தின் 33 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வும் அஞ்சலிக் கூட்டமும் தாவடியிலுள்ள தர்மர் நினைவுத் தூபியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் உரையாற்றுகையிலையே சித்தார்த்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழ் மக்களுக்காக பல தமிழ்க் கட்சிகள் இருக்கின்றன. அந்தக் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டிய தேவையின் நிமித்தம் தமிழரசுக் கட்சி மற்றும் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் ஒரே அமைப்பாகச் செயற்பட்டன. ஆனாலும் அந்த ஒற்றுமை தொடர்ந்து நிலைக்காது கட்சிகளிடையே பிளவு ஏற்பட்டிருந்தது.

அதன் பின்னர் தமிழ் மக்களிற்காக ஆயுதப் போராட்டம் தோற்றம் பெற்ற காலப் பகுதியிலும் ஆயுதப் போராட்ட இயக்கங்களிடையேயும் ஒற்மை காணப்பட்டிருந்தது. ஆனாலும் துரதிஷ்டவசமாக இயக்ககங்களுக்கிடையேயும் அந்த ஒற்றுமை நீண்ட காலம் நீடிக்கவில்லை. இதன் பின்னர் மீளவும் கட்சிகளின் ஒற்றுமைக்கான அவசியம் ஏற்பட்டதால் பல கட்சிகள் ஒற்றுமையாக இருந்தன.

அந்த ஒற்றுமையும் இணைவும் அவசியம் தேவைப்படுகின்ற இந்தக் காலகட்டத்தில் இன்றைக்கு கட்சிகளிடையே முரண்பாடும் பிளவுகளும் தொடர்ந்து ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே தமிழ் மக்களின் உரிமைக்காகச் செயற்படுகின்ற தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை என்பது மிக மிக அவசியமாகக் காணப்படுகின்றது.

அவ்வாறு தமிழ் மக்களின் நலன்களுக்காக தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக ஒன்றாக இணைந்து பயணிப்பதன் மூலமாக தமிழ் மக்களுக்கு ஒரு பலம் ஏற்படும். அதனூடாக தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும். ஆகவே மக்களுக்காக ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டியது அவசியம் – என்றார்.

# மக்களையும் மண்ணையும் அறியாமல் அரசியலுக்கு வந்தவர்தான் சுமந்திரன்

## அதனால்தான் அவரது கருத்து அப்படி என்கிறார் சிவநேசன்

(எஸ்.நிதர்ஷன்)

மக்களையும் மண்ணையும் பற்றிய சரியான அறிவில்லாமல் அரசியலுக்கு வந்தவர்கள் இப்படித்தான் கூறுவார்கள் என்று வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினரும் விவசாய அமைச்சருமான க.சிவநேசன் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு பதிலடி வழங்கியுள்ளார்.

மகாவலி எல் வலயத்தினூடாக முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட எல்லைப் பிரதேசங்களில் மைத்திரி – ரணில் நல்லாட்சியிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வந்தனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் வடக்கு, கிழக்க மாகாண அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணிக் கூட்டத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியிருந்தனர். ஆனாலும் அவ்வாறு குடியேற்றங்கள் நடக்கவில்லை என்று ஜனாதிபதி மறுத்திருந்தார். மேலும் அது தொடர்பில் ஆராய்ந்து தாம் நடவடிக்கை எடுப்பார் எனவும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

அதேபோன்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்தின வடக்கில் சிங்கள மக்களைக் குடியேற்ற வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இல்லை என்றும் அவ்வாறு காணி வழங்கி குடியேற்றம் செய்ததாகக் கூறுவது பொய் என்றும் தெரிவித்திருந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் யாழில் ஊடக சந்திப்பொன்றை நடத்திய சுமந்திரனிடமும் இது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

அதாவது மகாவலி எல் வலயத்தினூடாக குடியேற்றங்கள் நடைபெறுகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுகின்ற போது ஜனாதிபதி அதனை மறுத்திருக்கின்றார். ஆகவே இதன் உண்மைத் தன்மை என்ன என்று கேள்வி எழுப்பியபோது அவ்வாறு குடியேற்றங்கள் நடக்கவில்லை என்று

(14 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக நடனக் கலைஞர்களின் ஆற்றுகை; பயன் பெறுமாறு கல்வி அமைச்சர் அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் நாட்டில் இருந்து வருகை தரும் முன்னணி நடன கலைஞர்கள் நடத்தும் செயலமர்வில் வடக்கில் உள்ள நடன ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெற வேண்டும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் ஊடக சந்திப்பு நேற்று அவரது அலுவலகத்தில் இடம்பெற்றது. அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் –

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கலாசார பிரிவும் இந்தியத் துணைத் தூதரகமும் இணைந்து 'தெய்வீக சுகானுபவம்' என்ற தொனிப்பொருளில் கலை நிகழ்வுகளை நடத்தி வருகிறோம்.

இந்த நிகழ்வின் ஊடாக எமது கலை ஆற்றல்களைப் பரிமாற்றம் செய்துகொள்ளக்கூடியதாக இருப்பதுடன், தமிழ் நாட்டில் உள்ள சிறந்த கலைஞர்களை அறிமுகப்படுத்தி அவர்கள் ஊடாக எமது மாணவர்கள், ஆசிரியர்கள் கூடிய பயனைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அந்த வகையில் இம்முறை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டத்தில் இந்த நடன கலைஞர்களின் ஆற்றுகை மற்றும் செயலமர்வை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இம்முறை தமிழ் நாட்டில் இருந்து திருமதி சத்திய நாராஜணன் குழவினர் வருகை தருகிறார்கள். இந்த நடனக்குழுவினர் நாளை 4 ஆம் திகதி காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் செயலமர்வை நடத்தவுள்ளனர்.

நாளை மறுதினம் 5 ஆம் திகதி மால 6 மணிக்கு சங்கிலியன் பூங்காவில் அவர்களின் நடன ஆற்றுகை நடைபெறவுள்ளது. இது தெய்வீக ஆற்றுகையாக அமையவுள்ளது. எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் பயிற்சி பட்டறை நடைபெறவுள்ளது. பி.ப 4 மணிக்கு நடன ஆற்றுகை அதே இடத்தில் நடைபெறவுள்ளது.

ஆகவே இவ்வாறான சிறந்த கலைஞர்களுடைய ஆற்றலை எமது மாணவர்களும் ஆசிரியர்களும் பெறக்கூடியவகையில் பயிற்சிப்பட்டறை நடாத்தப்படவுள்ளது. அந்தவகையில் இச்செயலமர்வு, ஆற்றுகை மூலம் பல விடயங்களை கற்றுக்கொள்ள ஆர்வமுள்ள ஆசிரியார்கள், மாணவர்கள், பல்கலை மாணவர்கள் அதில் கலந்து கொண்டு பயன் பெற வேண்டும் – என மேலும் தெரிவித்துள்ளார்.

### நாளை

04.09.2018
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம் : மிருகசீரிடம் பி.ப 4.27 வரை
திதி: நவமி பி.ப 1.57 வரை
சுபநேரம் : 10.35 – 12.05 வரை
இராகுகாலம் : 3.05 – 4.35 வரை

# வடக்கு மாகாணசபை உறுப்பினரின் செயலரிடம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணை!

வவுனியா, செப். 03

வடக்கு மாகாண சபை உறுப்பினர் இந்திரராசாவின் செயலாளரிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் இந்திரராசாவின் செயலாளர் கனகலிங்கம் சிறிமதன் என்பவர் இவ்வாறு விசாரணைக்கு உள்ளானார்.

வவுனியா நகரில் இருந்து குடியிருப்பு வீதி வழியாக தனது வீடு செல்லும் வேளையில் அவரை இடைமறித்தவர்கள் தம்மை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் என அடையாள அட்டையைக் காட்டி அரைமணி நேரம் தன்னிடம் விசாரணை நடத்தினர் என அவர் தெரிவித்துள்ளார்.

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை

**யாழ் பிரதேசத்தில் -**

அல்லைப்பிட்டி, மண்கும்பான், வெண்புறவிநகர் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்–**

மடுமாதா ஆலயப் பிரதேசம், மடுமாதா ஆலயம் ஆகிய பிரதேசங்களிலும்,

**நாளை செவ்வாய்** காலை 8.00 மணியி லிருந்து மாலை 5.00 மணிவரை

**யாழ் பிரதேசத்தில் -**

சிவகாமி அம்மன் கோவிலடி காரைநகர் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில் -**

மறக்கறம்பளையிலிருந்து மணிபுரம் கிராமம்வரை, தவசிக்குளம்கிராமம், அண்ணா நகர், சிறீ நகர், பூந்தோட்டம் கைத்தொழிற்பேட்டை, வரன் அரிசிஆலை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில் -**

மடுமாதா ஆலயப்பிரதேசம், மடுமாதா ஆலயம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# சகோதரர்களிடையே சண்டை; விலக்கச் சென்ற தாய் சாவு!

இரு சகோதரர்களுக்கிடையில் ஏற்பட்ட சண்டையை விலக்குவதற்கு சென்ற தாய் அதில் ஒருவரின் கத்திக்குத்துக்கிலக்காகி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 78 வயதான சிங்கப்புர கோகந்தர பகுதியில் வசிக்கும் வலிமுனி கருணாவதி என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த கருணாவதியின் இளைய மகன் தன்னுடைய காணியை சுத்தப்படுத்திக் கொண்டிருக்கும்போது அங்கு சிலருடன் வந்த மூத்த மகன் இளைய மகனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இந்த வாக்குவாதம் கைகலப்பில் முடிந்துள்ளது. இதன்போது இளைய மகன் கத்தியால் குத்த முயற்சித்த போது, இந்தச் சண்டையை கருணாவதி விலக்க வந்துள்ளார். இந்தநிலையில் கருணாவதியையும் மூத்த மகனையும் இளைய மகன் கத்தியால் குத்தியுள்ளார்.

இதன்போது காயமடைந்த இருவரையும் வைத்தியசாலையில் சேர்த்த போதும் சிகிச்சை பலனின்றி கருணாவதி உயிரிழந்துள்ளார். இதேவேளை காயமடைந்த கருணாவதியின் மூத்தமகனும் இளைய மகனும் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆருடம் கூறுகிறார் கருணா



இலங்கைத் தீவில் அடுத்த மூன்று மாதங்களில் திடீர் சம்பவங்கள் ஏற்படும் என்று முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

தமது டுவிட்டர் தளத்தில் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 'அப்போது தெரியும் என் அருமை புலம் பெயர் தமிழர்களுக்கு' என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், விநாயகமூர்த்தி முரளிதரன் வெளியிட்டுள்ள இந்தக் கருத்து சமூகவலைத்தளங்களில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

# மோ.சைக்கிளை விரட்டினர் பொலிஸார்; தப்பியோடிய இளைஞர் இருவர் காயம்

வவுனியாவில் போக்குவரத்து பொலிஸாரால் விரட்டிச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள், மின்சாரக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதி, இறம்பைக்குளம் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா நகர் பகுதியில் இருந்து பிளசர் ரக மோட்டர் சைக்கிளில் மூன்று இளைஞர்கள் பயணித்துள்ளனர்.

இந்த மோட்டார் சைக்கிளை நகரப் பகுதியில் கடமையில் நின்ற போக்குவரத்து பொலிஸார் இருவர் மறித்துள்ளனர். இதன்போது இந்த இளைஞர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்தாது தப்பியோடியுள்ளனர்.

இதனால், போக்குவரத்து பொலிஸார் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்களை விரட்டிச் சென்றுள்ளனர். இதன்போது, இறம்பைக்குளம் பாடசாலை அருகில் உள்ள சந்தியில் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகினர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், ஒரு இளைஞன் சிறு காயங் களுக்குள்ளானார்.

அத்துடன், இவ்விபத்தின் போது குறித்த இளைஞர்களை பின்னால் விரட்டிச் சென்ற பொலிஸார் ஒருவரும், விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளுடன் மோதி காயமடைந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

# நீர்க் கட்டணம் 15 வீதம் உயரும்?

பதினைந்து வீதத்தினால் நீர்க்கட்டணத்தை உயர்த்த வேண்டுமென யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு இது தொடர்பான யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளது.

கடந்த 8 ஆண்டுகளாக நீர்க்கட்டணம் உயர்த்தப்படவில்லை எனவும், நட்டத்திலேயே மக்களுக்கு நீர் விநியோகம் செய்யப்படு கிறது என அந்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

நீர் விநியோகம் மூலம் ஆண்டொன்றுக்கு 2300 கோடி ரூபா வருமானம் ஈட்டப்படுவதாகவும், இந்தத் தொகையை மூவாயிரம் கோடி ரூபாவாக உயர்த்த வேண்டுமென அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் சமுர்த்தி பயனாளிகள் மற்றும் மத வழிபாட்டு தளங்களுக்கு தொடர்ந்தும் சலுகை அடிப்படையிலேயே நீர்க்கட்டணம் அறவீடு செய்யப்பட உள்ளது.

அமைச்சரவையில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டபோது இது குறித்து நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமென அமைச்சர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்

# பெறுகை அறிவித்தல்

## தனியார் பாதுகாப்புச் சேவை
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 2018.09.03 - 2018.09.12 ந.ப 12.00 மணி வரை**
**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 2018.09.13 பி.ப 2.00 மணி வரை**
**கேள்வி திறக்கும் திகதி :- 2018.09.13 பி.ப 2.30 மணி**

1. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட சேவைகளுக்காகக் கேள்வி கோரப்படுகின்றன.
2. கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிடப்படும் மீளளிக்க முடியாத படிவக் கட்டணம் ரூபா **2,000.00** உம், மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணம் ரூபா **10,000.00**உம் பணமாகச் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர்,வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** என்றமுகவரிக்குஅரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் **மூலப்பிரதி** எனவும் இணைப்படிவத்தில் **இணைப்பிரதி** எனவும் எழுதப்பட்டு இணைப்பிரதியை **'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணைவீதி, யாழ்ப்பாணம்'** எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத் திகதிக்குமுன்னர் கிடைக்கப் பெற வேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும்.
4. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.
5. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக **வலிகாமம் கிழக்கு பிரதேசசபை பெறுகைக் குழுவால்** எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
6. மேலதிக விவரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர் எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| 1 | வலிகாமம் கிழக்குபிரதேசசசபை தலைமை அலுவலகம், புத்தூர் | 01 | 01 | 2018.10.01-2019.12.31 |
| 2 | திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ நிலையம், கைதடி நீர்வேலி இணைப்புவீதி, நீர்வேலி | 01 | 01 | 2018.10.01-2019.12.31 |
| | மொத்தம் | 02 | 02 | |

**தலைவர்**
**உள்ளூராட்சி பெறுகைக்குழு**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**புத்தூர்.**
**2018.09.03**

# நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் இன்று

நல்லூர், செப். 03

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் உற்சவத்தை யொட்டி, தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத் தின் அனுசரணையுடன் துர்க்காதேவி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கு, இன்று மாலை 6.45 8.15 வரை நடைபெறும்.

இசைக்கச்சேரியில் பாட்டு: பரமேஸ்வரி கணேசன், வயலின்: சு.கோபிதாஸ், மிருதங்கம்:- நா. மாதவன், கெஞ்சிரா:- க.நந்தகுமார்.

# தினசரி ராசி பலன் (03.09.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆவணித்திங்கள் 18ஆம் நாள் திங்கட்கிழமை. அஷ்டமித்திதி இரவு 7.20 மணி வரை பின்னர் நவமி. நட்சத்திரம்:ரோகினி இரவு 8.05 மணி வரை பின்னர் மிருகசீரிடம். அமிர்தசித்த யோகம் முழுவதும்.

**ராகுகாலம் -** காலை 7.34 மணி முதல் 9.06 மணி வரை.

**சுபநேரம் -** பகல் 12.05 மணி முதல்1.34 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி -** ஆவணி மாத தேய்பிறை அஷ்டமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- ரோகிணி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** ஆக்கபூர்வமான நாள். பணம் சரளமாகப் புழங்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். சிலருக்கு சொத்து வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். சிலருக்கு வெளியூரில் இருந்து சந்தோசமான செய்தி வந்து சேரும்.

**ரிஷபம்** அனுகூலமான நாள். பொருளாதாரம் மனநிறைவைத் தரும். குடும்ப உறவு மேம்படும். திருமண முயற்சியில் எதிர்பார்த்தபடி நல்ல முடிவு உண்டாகும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும்.

**மிதுனம்** யோசனையான நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமத மாகும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் தலைதூக்கும். வியாபாரத்தில் மந்த நிலை காணப்படும். புதிய கொள்முதல் தாமதமாகும்.

**கடகம்** இன்பமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். வெளிநாடு செல்ல முயற்சி செய்தவர்களுக்கு சந்தர்ப்பம் கனிந்து வரும். விட்டுப் போன உறவுகள் திரும்ப வந்து சேருவார்கள்.

**சிம்மம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். எதிர்பாராத செலவுகள் உண்டாகும். தேக சுகக் குறைவால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். விருந்தினர் வரவால் களிப்பும், செலவுகளும் அதிகரிக்கும்.

**கன்னி** யோசனையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். செய்யும் தொழிலில் பல இடைஞ்சல்கள் உண்டாகும். உறவினர்கள், நண்பர்கள் பாராமுகமாக நடந்து கொள்வர்.

**துலாம்** கவலையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். மனைவியின் உடல் நிலை பாதிப்படையும். தாய் தந்தையரைப் பற்றிய கவலை மனதை வாட்டும்.

**விருச்சிகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். அளவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் தடை, தாமதமாகும். வியாபாரத்தில் சமலாபம் கிடைக்கும்.

**தனுசு** சுபீட்சமான நாள். தனலாபம் பெருகும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். சகோதர வழியால் நன்மை உண்டாகும். ஆடை, ஆபரணங்கள் சேரும். பெரிய மனிதர் சந்திப்பால் சிலருக்கு அனுகூலம் உண்டாகும்.

**மகரம்** அதிர்ஷ்டமான நாள். பணம் பல வழிகளிலும் வந்து சேரும். வெளிநாட்டு உறவினர் வரவால் வீடு களை கட்டும். ஆடை, அணி மணிகள் வீட்டிற்கு தேவையான பொருள்கள் வந்து சேரும்.

**கும்பம்** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் சம்பந்தமாய் வெளியூர்களுக்கு அலைய வேண்டி வரும். சிலர் கொடுத்த பணத்தை மீளப் பெறுவதற்கு அலைய வேண்டி வரும். சிலருக்கு தொழில் இடமாற்றம் ஏற்படும்.

**மீனம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவீனங்கள் அதிகரிக்கும். தொழிலில் சுமாரான முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு கடின உழைப்பு இருக்கும்.

**சந்திராஷ்டம நாள்: சித்திரை 3ஆம், 4ஆம் பாதங்கள், அவிட்டம், விசாகம் 1ஆம் பாகம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# கந்தபுராண எழுச்சி அறிநெறி விழாவின் இன்றைய நிகழ்வுகள்



இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம் என்ற தொனிப்பொருளில், நல்லூர், கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டுக் கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் கந்த புராண எழுச்சி அருள்நெறி விழா - 2018 நிகழ்வுகளை நல் லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத் திலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலும் சிறப்புற முன்னெடுத்து வருகிறது.

அந்தவகையில், பத்தொன்பதாம் நாள் நிகழ்வுகள், இன்று திங்கட்கிழமை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில், மாலை 3.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை நல்லூர் ஸ்ரீஷ்கந்தபதிக் கலாமன்றக் குழுவினரின் பஜனை நிகழ்வும், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் யாழ்.பல்கலைக் கழக மேனாள் இந்துநாகரிகத் துறைத்தலைவர், பேரா சிரியர் மா.வேதநாதன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, பருத்தித்துறைப் பிரதேச அறநெறிப் பாட சாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் யாழ்.பல் கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் சி.ரமணராஜாவின் தீட்டு கடற்வேற் குமரன் தேவி வள்ளி யம்மை எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும், யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையா ளர் திருமதி. மஞ்சுசீதா ஜெயதீஸ் அவர்களின் வீணை யிசை ஆகியவை சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறவுள் ளன. (இ

## மட்டு. ஆயித்தியமலை ஆலய தரிசனம்:

# அரச பஸ்களில் யாத்திரிகளிடம் மிக கூடுதல் கட்டண அறவீடு

மட்டக்களப்பு, ஆயித்திய மாதா ஆலயத்திற்கு யாத்திரை செல்வோரிடம் அரச பஸ்களில் அளவுக்கு மீறிய கட்டணங்கள் அறவிடப்படுகின்றன எனக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

விசேட சேவை என பஸ் சேவையை ஒழுங்குபடுத்தி விட்டு இவ்வாறு கண்ணைப் பிடுங்கும் கட்டணம் அறவிடுவது நியாயமா எனவும் பயணிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதன்படி இந்த ஆலயத்திற்கு செல்வதற்காக மக்களுக்கு விசேட சேவை என தெரிவித்து ஒரு நபருக்கு 65 ரூபா அறவிடப்படுவதாகவும், சாதாரணமாக குறித்த பகுதிக்கு செல்வதற்கு 45 ரூபா அளவிலேயே கட்டணம் அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், மக்களுக்கு சேவை வழங்குவதன் பொருட்டு விசேட சேவை என கூறிக்கொண்டு மக்களின் பணத்தை சூறையாடுகின்றனர் எனவும் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

# மோ. சைக்கிள் உதிரிப் பாகங்களை திருடிய இருவருக்கு விளக்கமறியல்!

திருகோணமலை,தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடி அதன் பாகங்களை கழற்றி வைத்திருந்த இருவரை இம்மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கந்தளாய் நீதிமன்ற நீதிவான் துசித்த தம்மிக்க நேற்றுமுன் தினம் இந்த உத்தரவைப் பிறப்பித் துள்ளார்.

மயில்தீவு, சிராஜ்நகர், தம்பல காமம் பகுதியைச் சேர்ந்த 22 மற் றும் 23 வயதுடைய இரண்டு சந் தேகநபர்களே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேக நபர்கள் தம்பல காமம் பகுதியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மோட்டார் சைக்கிளைத் திருடி, அதன் பாகங்களை தனித் தனியாக கழற்றி வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டி ருந்தனர்.

இது தொடர்பில் நேற்று முன் தினம் சந்தேகநபர்கள் நீதிமன் றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட போதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# விபத்தில் இளைஞர் உயிரிழப்பு!

அநுராதபுரம் - தம்புள்ளை வீதியில் குருந்தன்குளம், திரிய கஸ்ஹந்திய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் 21 வயதான இளைஞ ரொருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார்சைக்கிள், வானொன் றுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது எனத் தெரிய வருகிறது.

சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞன்அநுராதபுரம்போதனா வைத்தியசாலையில்சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞன் இம் முறை உயர்தரப் பரீட்சை எழுதி ய மாணவன் என பொலிஸார் குறிப்பிட்டனர். வானின் சாரதி கவ னக்குறைவுடன் திடீரென குறுக்கு வீதிக்கு வானை திருப்ப முயற்சித் ததன் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள துடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.








யாழ். குருநகர் கிறின் பீல்ட் சன சமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் வைத்தியர் பொ. ஜெசிதரன் விரிவுரை ஆற்றுவதையும் பல் வைத்தியர் சாம்பதி பல் பரிசோதனை நடத்துகின்றமையையும் றெஜினா றெஜினோல்ட் கண்ணாடி வழங்குவதையும் படத்தில் காணலாம். (இ

# நேபாள லும்பினி புனித பூமிக்கு ஜனாதிபதி மைத்திரி விஜயம்



கொழும்பு, செப். 03

நேபாளத்தின் கத்மண்டு நகரில் இடம்பெற்ற பிம்ஸ்டெக் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்குபற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாநாட்டு நடவடிக்கைகள் நிறைவடைந்தமையைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் நேபாளத் திற்கான இரண்டு நாள் அரச முறை பயணத்தை ஆரம்பித்தார்.

இதன் முதல் நடவடிக்கையாக புத்தர் பிறந்த புனித லும்பினி உட்பட சில சமய ஸ்தலங்களுக்கு ஜனாதிபதி நேற்றுமுன் தினம் விஜயம் செய்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் லும்பினி புனித பூமிக்கு விஜயம்செய்த ஜனாதிபதியை அம்மாநிலத்தின் முதலமைச்சர் மற்றும் கலாசார அமைச்சர் ஆகியோர் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி சமயக் கிரியைகளில் ஈடுபட்டமையுடன், லும்பினிக்கு விஜயம் செய்யும் எந்த வொரு அரச தலைவருக்கும் கிடைக்காத அபூர்வமானதொரு சந்தர்ப்பமாக, சித்தார்த்த இளவரசர் பிறந்து முதலாவது காலடி எடுத்துவைத்த இடத்தை தரிசிக்கும் சந்தர்ப்பம் இலங்கை ஜனாதிபதிக்குக் கிட்டியது.

லும்பினி இலங்கை மகா விகாரையின் பொறுப்பாளர் சங்கைக்குரிய கலஹுபிடிய பிரேமரத்ன நாயக்க தேரரினால் சமயக் கிரியைகள் நடத்தப்பட்டன. ஜனாதிபதியும் தூதுக்குழுவினரும் இந்த சமய கிரியைகளில் கலந்துகொண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து லும்பினி அபிவிருத்தி மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள் குறித்து கேட்டறிந்த ஜனாதிபதி, அந்த நடவடிக்கைகளுக்கு தேவையான எந்தவொரு உதவியையும் வழங்க தான் தயாராக உள்ளேன் என்றும் தெரிவித்தார்.

அதன் பின்னர் ஜனாதிபதி லும்பினி புனித பூமியிலுள்ள மாயாதேவி விகாரைக்கு விஜயம் செய்தார். கௌதம புத்தரின் தாயாரான மாயாதேவியின் பெயரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த விகாரை 1997ஆம் ஆண்டு யுனெஸ்கோவினால் உலக மரபுரிமையாக பிரகடனப் படுத்தப்பட்டது.

இதன்போது ஜனாதிபதிக்கு விசேட நினைவுச் சின்ன மொன்று வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி லும்பினி புனித பூமியிலுள்ள இலங்கை மகா விகாரைக்குச் சென்றார். இலங்கை மல்வத்தை மகா விகாரை பீடத்தினால் நிர்வகிக்கப்படும் இந்த விகாரைக்குச் சென்று சமய கிரியைகளில் ஈடுபட்ட ஜனாதிபதி, அங்கு வைக்கப்பட்டுள்ள புனித தந்தத்தையும் வழிபட்டார்.

லும்பினி புனித பூமிக்கு யாத்திரை செல்லும் இலங்கையர்களின் தங்குமிட வசதிக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள துட்டகைமுனு ஓய்வு விடுதியை பார்வையிட்ட ஜனாதிபதி, அதன் குறைபாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்தார்.

ஜனாதிபதியின் வருகையை நினைவு கூரும் வகையில் நாக மரக் கன்றொன்றும் இங்கு நடப்பட்டது.

இதேநேரம் நேபாளத்தின் காத்மண்டு நகரில் உள்ள பிரபல இந்துக் கோயிலான பசுபதிநாத் கோயிலுக்கு சென்ற ஜனாதிபதி, அங்கு சமய கிரியைகளில் ஈடுபட்டார். இந்த கோயில் 1979ஆம் ஆண்டு யுனெஸ்கோ நிறுவனத்தினால் உலக மரபுரிமையாக பிரகடனப்படுத்தப்பட்டதுடன், உலகெங்கிலும் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு வருகை தருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குளங்களில் நீர்மட்டம் 25 வீதத்தால் குறைவு!



தற்போது நிலவும் வறட்சியால் அனைத்து குளங்களிலும் நீர்மட்டம் தற்பொழுது 25 வீதத்தால் குறைவடைந்துள்ளது.

இதனால், உற்பத்திக்கான நீர் விநியோகமும் நிறுத்தப்பட்டுள்ளது என நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமையாளர் வசந்த பண்டார பளுகஸ்வெவ தெரிவித்தார்.

குடிதண்ணீருக்காக ஆகக்கூடுதலான நீர் விநியோகிக்கப்படுகிறது. மகாவலி நீர் விநியோகிக்கப்படுவதனால் வறட்சியை எதிர்கொண்டுள்ள பொது மக்களுக்கு நீரை விநியோகிப்பதில் பிரச்சினைகள் இல்லை.

இம்மாத நடுப்பகுதியில் இடைக்காலப் பருவப் பெயர்ச்சி மழை எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் குளங்களுக்கு தேவையான நீர் கிடைக்கும் என்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமையாளர் வசந்த பண்டார பளுகஸ்வெவ மேலும் கூறினார்.

## 232 புதிய கதிரைகள் நாடாளுமன்ற சபைக்கு!

### கொள்வனவு செய்ய பிரேரணை

நாடாளுமன்ற சபைக்கென 232 கதிரைகளை புதிதாக கொள்வனவு செய்வதற்கு பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கு மேலதிகமாக நாடாளுமன்ற கூட்டம் நடைபெறும் சபையின் உட்பகுதிக்கு தரை விரிப்பொன்றும் கொள்வனவு செய்வதற்கான யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது சபைக்குள் இருக்கும் கதிரைகள் நாடாளுமன்றம் அமைக்கப்பட்ட காலத்தில் இருந்து பயன்படுத்தப்பட்டு வருபவை எனவும் இதனால், அந்தக் கதிரைகள் சொகுசுத் தன்மையை இழந்துள்ளன என்றும் அத்தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

நாடாளுமன்ற முழுக் கட்டிடத் தொகுதியையும் புனரமைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இதன் ஆரம்ப கட்டமாக நாடாளுமன்ற மலசல கூட வசதிகள் சீர் செய்யப்பட்டு வருகின்றன என நாடாளுமன்ற தகவல் வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

## சேதனப் பசளை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு கொடுப்பனவு!

கொழும்பு, செப். 03

சேதனப் பசளையைப் பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பெரும் போகத்தில் இருந்து ஹெக்டயருக்கு 18 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது.

நெல் உற்பத்திக்காக யூரியா உரம் 500 ரூபாவுக்கும், ஏனைய உர வகைகளை 1500 ரூபாவுக்கும் அரசு உரமானியமாக வழங்கும். எனினும், சேதனப் பசளையைப் பயன்படுத்தி செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக இதுவரை எந்த சலுகையும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

எதிர்வரும் பெரும்போகத்தில் இருந்து விவசாயிகளுக்கு சேதனப் பசளையைக் கொள்வனவு செய்வதற்காக ஒரு ஹெக்டயருக்கு 18 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குரிய அமைச்சரவைப் பத்திரம் தற்போது வகுக்கப்பட்டுள்ளது. சுமார் 5 ஆயிரம் பேர் வரை தற்போது சேதனப் பசளையைப் பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபடுகின்றனர்.

விவசாயத் திணைக்களத்தின் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வின்படி நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் உள்ள மணலில் போதியளவு பொஸ்பரஸ், பொட்டாசியம் காணப்படுகிறது என தெரியவந்துள்ளது. அதனால், கூடுதலாக இரசாயன பசளையை பயன்படுத்த வேண்டிய தேவை இல்லை என விவசாய அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

## கலஹா வைத்தியசாலை மீதான தாக்குதல்; ஏழு பேர் அதிரடி கைது!



கலஹா தெல்தோட்டையைச் சேர்ந்த ஒன்றரை வயது பச்சிளம்பாலகன் சங்கர் சஜியின் பூதவுடல் பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதன்போது பெருமளவிலான மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்திய அதேவேளை, இறுதிக் கிரியைகளிலும் பங்கேற்றிருந்தனர்.

கடந்த 28ஆம் திகதி கலஹா வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்படாததால் குழந்தை உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, பேராதனை வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி அமல் உதயநாத் ஜயவர்தனவின் பகிரங்கத்தீர்ப்பை அடுத்தே குழந்தையின் பூதவுடல் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை இறுதிக்கிரியைகள் இடம்பெற்றன.

சம்பவ தினமான கடந்த 28 ஆம்திகதி கலஹா வைத்தியசாலை வைத்தியர்களின் கவனயீனத்தால்தான் குழந்தை உயிரிழந்தது என தெரிவித்து ஆத்திரம் கொண்ட பிரதேசவாசிகள் வைத்தியசாலையை சூழ்ந்து கடும் ஆர்ப்பாட்டத்தையும் தாக்குதல்களையும் நடத்தி இருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது வைத்தியசாலை கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் காரணமாக சுமார் 1 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டட உடைமைகள் சேதமடைந்துள்ளன எனப் பொலிஸாரின் மதிப்பீடுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் வைத்தியசாலையின் பொது உடைமைகளுக்கு சேதம் விளைவித்த ஏழு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலர் உணவு!

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்குவது தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

தற்போது நிலவும் வறட்சியின் காரணமாக வடக்கு, வடமத்திய, மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட 50 பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஆகக்கூடுதலான மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்குத் தேவையான தகவல்கள் அமைச்சர் துமிந்த திசாநாயக்காவின் ஆலோசனைக்கமைவாக திரட்டப்பட்டு வருகின்றன என தேசிய இடர் நிவாரண சேவை மத்திய நிலையத்தின் பணிப்பாளர் சமிந்த பத்திராஜ தெரிவித்தார்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்ட மக்களுக்கு குடிதண்ணீரை விநியோகிப்பதற்காக 5 கோடி 50 லட்சம் ரூபா மாவட்டச் செயலாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

பௌசர்கள், தாங்கிகள் மற்றும் டிரக்டர்கள் ஆகியனவும் வழங்கப்பட்டன. அம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன.

உலர் உணவுப் பொருள்கள் இந்த வருடத்தில் பல மாதங்கள் வழங்கப்பட்டதுடன், வறட்சியை மீண்டும் எதிர்நோக்கிய மக்களுக்கு மீண்டும் வழங்குவது தொடர்பில், கவனம் செலுத்தப்பட்டுள்ளது. உலர் உணவு முத்திரைக்குப் பதிலாக அரசு 250 கோடி நிதியையும் ஒதுக்கீடு செய்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரத்தினக்கல் தொழில்துறை மூலமான தயாரிப்புக்களை அதிகரிப்பதற்கு திட்டம்!

கொழும்பு, செப். 03

அகழ்வு மற்றும் இரத்தினக்கல் தொழில்துறை மூலமான தயாரிப்புக்களை அதிகரிப்பதற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழில்துறை மொத்த உற்பத்திக்கு 2.7 சதவீத பங்களிப்பு கிடைக்கிறது என கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

2017 ஆம் ஆண்டு முதல் காலாண்டுப் பகுதியுடன் இதனை ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் முதல் காலாண்டுப் பகுதியில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது என அமைச்சர் கூறினார்.

# சலுகை அரசியல் அல்ல: உரித்து அரசியலே தேவை

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்றுமுன் தினம் பருத்தித்துறையில் உள்ள தனது அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி இருந்தார். அங்கு தற்போதைய அரசியல் நிலைமை குறித்து பல்வேறு விடயங்களைத் தெரிவுபடுத்தி இருந்தார். இவை தொடர்பில் நேற்றைய 'காலைக்கதிர்' பத்திரிகையில் சில தகவல்கள் வெளியாகி இருந்தன. அதன் மிகுதி இங்கு பிரசுரமாகியுள்ளது.**

நாடாளுமன்றக்குழுவின் அமர்வு நடைபெறும்போது அது நாடாளுமன்ற அமர்வாகவே தான் கருதப்படும்.

அது நாடாளுமன்றக் கட்டடத்தில் நடந்தாலும் அந்தக் கட்டடத்திற்கு வெளியே நடந்தாலும் நாடாளுமன்ற அமர்வாகத்தான் கருதப்படும். ஆகவே முதற்தடவையாக நாடாளுமன்ற அமர்வு போன்ற அமர்வு ஒன்று கண்டி மற்றும் யாழ். மாவட்டங்களில் நடைபெறுகின்றது. அதற்குப் பிறகு மாத்தறை மாவட்டத்தில் மூன்றாவது கூட்டமும் நடை பெறவுள்ளது. யாழ்ப்பாணத்தில் இந்தக் கூட்டம் நடைபெறவிருக்கும் காரணத்தால் இதனைப் பொது மக்களுக்கு அறிவிக்க வேண்டியுள்ளது. இது பகிரங்கக் கூட்டம் என்பதுடன் பொது அமைப்புகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. வரவு–செலவுத் திட்டத்திற்கான ஆலோசனைகளைப் பொதுமக்களிடத்தில் நேரடியாகப் பெற்றுக் கொள்வதற்கான ஓர் அமர்வாகவே இது அமைகின்றது. இந்த நிதிக் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றுவார்கள்.

**காணாமற்போனோருக்கு இடைக்கால கொடுப்பனவு**

**கேள்வி :** காணாமற்போனோர் ஆணைக்குழுவின் தலைவர் விசாரணை முடியும் வரை பொருளாதார ரீதியிலான கொடுப்பனவை வழங்க வேண்டு மென ஆலோசனையை முன் வைத்திருக்கின்றார். இது பாதிக்கப்பட்ட மக்களின் மனநிலையை ஆற்றுகைப்படுத்துமா?

**பதில்:** இந்தவிடயம் குறித்து சிலர் எங்களோடு பேசியிருந்தார்கள். அதாவது இந்த ஆணைக்குழு காணாமற்போனோரின் உறவுகளுடன் பல இடங்களில் பல கூட்டங்களை நடத்தியிருக்கின்றது. அவர்கள் கூட்டங்களை நடத்தச் சென்ற இடங்களில் எதிர்ப்புக்களும் வந்திருக்கின்றன. சிலர் கூட்டங்களுக்குப் போகமாட்டோம் என்றும் கூறியிருக்கின்றனர். ஆனால் எல்லா இடங்களிலும் கூடுதலான மக்கள் அந்தக் கூட்டங்களுக்குப் போயிருக்கின்றார்கள். போனவர்கள் பலருடைய கருத்து என்னவெனில், நீங்கள் விசாரணை நடத்துவது நல்லது. அவ்வாறு விசாரணையை நடத்தி எங்களுக்கு உண்மையை அறியத் தரவேண்டும். அதுவே எங்களுக்கு பிரதானமாக தேவையான விடயம். ஆனால் நாங்கள் இன்றைக்குச் சீவிப்பதற்கு வழியில்லாமல் பலர் இருக்கின்றோம். அதைக் குறித்தும் நீங்கள் கவனமெடுக்க வேண்டு மென்றும் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இடைக்காலக் கொடுப்பனவு என்பது காணாமலாக்கப்பட்டவருக்கான அல்லது அந்தச் சம்பவத்துக்கான ஒரு நட்டஈடு அல்ல. காணாமலாக்கப்பட்டவர் சம்பந்தமான விசாரணை நடைபெறும். அந்த உண்மை கண்டறியப்படும். ஆனால் அதுவரை அந்தக் குடும்பம் வாழ்வதற்கு ஏதுவாக ஒரு கொடுப்பனவு கொடுக்கப்பட வேண்டுமென்பது அந்த ஆணைக்குழுவின் சிபாரிசாக முன்வைக்கப்படுகிறது. ஆனால் அதற்கும் காணாமலாக்கப்பட்டமைக்கான நட்டஈட்டுக்கும் தொடர்பில்லை என்பதுதான் என் எண்ணம்.

**ராஜிதவின் கூற்று சரி**

**கேள்வி:** மகாவலி எல் வலயத்தினூடாகச் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன எனக் கூட்டமைப்பு தெரிவித்திருக்கிறது. ஆனால் அரசு அதனை மறுதலித்து வருகின்றது. இறுதியாக நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்னவும் இதனை மறுதலித்திருப்பதுடன் சிங்களக் குடியேற்றங்களை வடக்கில் மேற்கொள்ளவேண்டிய தேவை அரசுக்கு இல்லை என்றும், கடந்த ஆட்சியிலேயே குடியேற்றம் இடம்பெற்றது என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். இதனை கூட்டமைப்பு எவ்வாறு பார்க்கின்றது?

**பதில் -** நாங்கள் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியது சரி என்று நினைக்கிறேன். கடந்த அரசின் காலத்தில்தான் சிங்கள மக்கள் கொண்டுவந்து குடியமர்த்தப்பட்டிருக்கின்றனர். ஆனால் இப்பொழுது நாங்கள் எழுப்பியிருக்கும் விடயம் சற்று வித்தியாசமானது. அப்படியாக அந்த நாள்களில் கொண்டு வந்து குடியமர்த்தப்பட்டவர்களுக்கு இப்பொழுது உறுதிகளைக் கொடுக்கின்றார்கள். அந்த உறுதி கொடுக்கும் நிகழ்ச்சி இப்போது ஆரம்பித்திருப்பதைத்தான் நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம்.



## கூட்டமைப்பின் நிலைப்பாடு இதுவே

மகாவலி எல் வலயம் சம்பந்தமான பிரச்சினை என்பது இன்றைக்கு, நேற்றைக்கு உதயமான பிரச்சினை அல்ல. இது 1980 களில் மிகவும் உக்கிரமாக ஏற்பட்ட பிரச்சினை. மணலாறு இன்றைக்கு, நேற்றைக்கு, முந்தநாள் பறிபோகவில்லை. மணலாறு பறிபோனால் தமிழர் தாயகம் பறிபோய்விடும் என்று சிலர் சொல்வதை நான் பார்த்திருக்கின்றேன். மணலாறு பறிபோனது 80 களில். அதற்குப் பிறகு இப்போது இவ்வாறு பேசுகின்றவர்கள் நாடாளுமன்றத்தில் பத்து வருடங்களுக்கு மேல் இருந்திருக்கின்றார்கள். அவர்கள் நாடாளுமன்றத்தில் ஒரு தடவையாயினும் மணலாற்றைப் பற்றிப் பேசியதாக எனக்குத் தெரியவில்லை. இந்த நில ஆக்கிரமிப்பு நடைபெற்ற காலத்தில் கூட நாடாளுமன்றத்தில் இருந்தவர்களும் அதைப் பற்றிப் பேசவில்லை. அவ்வாறு நாடாளுமன்றத்தில் பேசியதாகக் கூடக் கண்டுபிடிப்பது கஷ்டம். நாடாளுமன்றத்தில் பத்து வருடங்கள் இருந்து பத்து தடவையாவது பேசினார்களா என்று கண்டுபிடிப்பதும் அபூர்வம்.

அப்படியானவர்கள் திடீரென்று வந்து இன்றைக்கு மணலாறு பறிபோனால் தமிழர் தாயகம் போய்விடும் என்று ஏதோ எதிர்காலத்தில் நடக்கப் போவதாகச் சொல்வது ஒரு விசித்திரமான கூற்று. இதனை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை.

கடந்த 57 ஆம் ஆண்டு பண்டா – செல்வா ஒப்பந்தத்திலும் இந்த நிலங்கள் பறிபோனதற்கு நிவாரணமாகத்தான் பிரதேச சபைகள் உருவாக்கப்படவேண்டும் என்றும், அதற்கு காணி அதிகாரம் வழங்கப்படவேண்டுமென்றும் கேட்கப்பட்டிருந்தது. இதிலும் விசேடமாக டட்லி – செல்வா ஒப்பந்தத்திலும் அரச காணிகள் பகிர்ந்தளிக்கின்றபோது என்னென்ன முறைகள் பின்பற்றப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களை இன்றைக்கு புதிய அரசமைப்பில் காணி சம்பந்தமான விடயத்தில் நாங்கள் உள்ளடக்கியிருக்கின்றோம்.

ஆகையினாலே அந்த சரித்திரப் பின்னணியில் விடயங்களுக்கான பாதுகாப்பைத் தேடும் விடயங்களை நாங்கள் செய்து வருகின்றோம். அவ்வாறு செய்து வரும் இடைப்பட்ட காலத்திலும் காணிகள் பறிபோவதையும் நாங்கள் தடுக்கவேண்டும். இதைத் தடுக்கின்ற ஆர்ப்பாட்டங்களை மஹிந்த காலத்திலும் நடத்திப் பார்த்திருக்கிறோம். இவ்வாறு முறிகண்டியில் நடந்த ஒரு போராட்டத்தில் எம்.பிக்கள் மாத்திரம் நின்றார்கள். ஆனால் மக்கள் வரவில்லை. அவ்வாறு அந்தக் காலத்தில் போராட்டத்துக்கு ஒருவரும் வருவதில்லை.

அந்தக் காணிகள் விடுவிக்கப்பட வேண்டுமென நாடாளுமன்றத்தில் நான் பேசியிருக்கின்றேன். எல்லாத்தரவுகளையும் முன்வைத்திருக்கின்றோம். அந்தக் காலத்தில் மக்கள் வீதிகளில் வந்து போராடுவதற்குப் பயம் இருந்தது. அந்தப் பயமும் நியாயமாக இருந்தது. ஆனால் இன்றைக்கு ஆட்சிமாற்றத்தால் என்ன நடந்தது என்று கேட்டால், வீதிகளில் போராடுவதற்காகவாவது சுதந்திரம் கிடைத்திருக்கின்றதென்பது உண்மையான விடயம். அதைச் சொல்வதற்கு நான் தயங்கவில்லை.

**ஆட்சி மாற்றத்தால் தமிழருக்கு நன்மை**

அதனாலே பல விடயங்கள் தற்போது மாறியிருக்கின்றன. கேப்பாபிலவில் ஒரு சிறிய பகுதியைத் தவிர மீதி எல்லாம் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. வலி.வடக்கிலும் அதேபோன்று காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் இந்த அரசு வந்த பின்னர் கூட மயிலிட்டி விடுவிக்கப்படாது என்று முதலாவது கூட்டத்தில் நாடாளுமன்றத்தில் எங்களுக்குச்சொல்லப்பட்டது. ஆனால் மயிலிட்டித் துறைமுகம் மற்றும் மயிலிட்டிப் பிரதேசமும் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. இன்னமும் சில பகுதிகள் விடுவிக்கப் படாமலும் உள்ளன.

இந்த மாற்றங்கள் எல்லாம் நடைபெறுவதற்கு – அதிலும் விசேடமாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் எல்லாம் விடுவிக்கப்படுவதற்குப் – பிரதான காரணம் இந்த ஆட்சி மாற்றம்தான். அவ்வாறிருக்கையில் இந்த ஆட்சி மாற்றத்தால் என்ன நடந்தது? ஆட்சி மாற்றத்துக்காகக் கூட்டமைப்பு வெறுமனே கை தூக்கினார்கள் – உதவி செய்தார்கள் – அதனால் எந்தவித பிரதிபலனும் கிடைக்கவில்லை என்று சொல்வதெல்லாம் அப்பட்டமான பொய். அது எமது மக்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் முழுவதும் நடந்து முடிந்துள்ளன என்று நாங்கள் சொல்லவில்லை. இப்போதும் மயிலிட்டியில் எமது கட்சித் தலைவர் ஜனாதிபதிக்கு முன்பாகப் பல விடயங்களைக் காட்டமாக எடுத்துச் சொல்லியிருந்தார்.

ஆனால் எதுவுமே நடக்கவில்லை, இந்த ஆட்சி மாற்றத்தால் தமிழ் மக்களுக்கு தோல்வி என்று சொல்லுவது அப்பட்டமான பொய். அப்படிச்சொல்ல நான் தயங்கவும் இல்லை. ஏதோ அரசுக்கு கூசா தூக்கி என்று சமூக வலைத்தளங்களிலே பிரசாரங்கள் செய்கின்ற காரணத்தினால் நான் அதனைச் சொல்லத் தயங்கவில்லை. ஏனெனில் நான் உண்மையைத்தான் சொல்லுகின்றேன். இந்த ஆட்சி மாற்றம் ஏற்படாவிட்டால் வலிவடக்கிலே 6,348 காணி ஏக்கரும் அரச காணியாகவே மாறியிருக்கும். அதற்கு நாங்கள் வழக்கும் வைத்திருந்தோம். அந்த ஆட்சியில் வழக்குகளும் எப்படி மாறியிருக்கும் என்பதும் எங்களுக்குத் தெரியும்.

(09 ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர்
Kalaikkathir



# சலுகை அரசியல் அல்ல...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேப்பாபிலவில் ஓர் அங்குலம் கூட விடுவிக்கப்பட்டிருக்கமுடியாது என்று நிலைமை இருந்தது. ஏனெனில் அந்த மக்களுக்கு வேறு இடங்களில் வாழ்விடங்கள் கொடுக்கப்பட்டு அவர்கள் அங்கு சென்று வாழ்ந்துவிட்டார்கள். முள்ளிக்குளம் கடைசிவரை விடுவிக்கப்பட்டிருக்காது. அப்படிப் பல இடங்கள் இருந்தன. அதனால் அவை எல்லாம் விடுவிக்கப்படாத நிலைமை இருந்தது. ஆனால் இன்று அவைகள் விடுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகையால் ஆட்சி மாற்றத்தால் ஏற்பட்ட நன்மைகள் அல்லது ஏற்பட்டுக் கொண்டிருக்கும் நன்மைகளை நாங்கள் மறந்து பேசக் கூடாது.

### குடியேற்றம் நடந்தமைக்கு சான்றுகள் இல்லை

மகாவலி எல் வலயத்தினூடாகக் குடியேற்றங்கள் நடந்தன என இதுவரை எங்களுக்குச் சான்றுகள் இல்லை. ஆனால் கடற்கரை அனுமதிப் பத்திரங்கள் சில கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது சம்பந்தமாகச் சில வழக்குகளும் உள்ளன. அந்த வழக்குகளில் மகாவலி அதிகார சபை கரைவலை அனுமதிப் பத்திரங்கள் இருவருக்குக் கொடுத்தார்கள் என நாங்கள் அறிகிறோம். மகாவலி அதிகார சபைக்குக் கரைவலை அனுமதிப்பத்திரம் கொடுப்பதற்கான சட்ட அதிகாரம் கிடையாது. ஆகவே அதனை நீதிமன்றத்தில் தீர்த்திருக்கலாம். குடியேற்றங்களைக் கூட நாங்கள் இன்றைக்குள்ள சட்டங்களின் அடிப்படையில் நீதிமன்றங்களில் தடுக்கலாம். இதை அந்தப் பிரதேசத்தில் உள்ள அமைப்புக்களுக்கும் நான் சொல்லியிருக்கிறேன்.

பல விடயங்களை இயலாத தருணங்களிலும் கூட நீதிமன்றங்களால் தடுத்து நிறுத்தியிருக்கின்றோம். விடுவிக்கப்படாது என்று இருந்த சம்பூர் விடுவிக்கப்பட்டது கூட நீதிமன்றத்தினாலேயேதான். அப்படியாகப் பல முன்னுதாரணங்கள் இருக்கின்றன. ஆனபடியால் எதனையும் செய்வதற்கு நாங்கள் தயார். ஆனால் உடனடியாக அரச தலையீட்டினால் இது நிறுத்தப்படமுடியுமாக இருந்தால் நிறுத்தப்படவேண்டும். அதைத் தான் அன்றைக்கு வடக்கு – கிழக்கு அபிவிருத்தி ஜனாதிபதி செயலணியில் எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருந்தார்கள். அவ்வாறு குடியேற்றம் ஏதும் நடக்கவில்லை என்று ஜனாதிபதி அன்று சொல்லியிருந்தாலும் அதற்கான ஆதாரங்கள் உள்ளன. ஆகவே அந்த ஆதாரங்களை முன்வைத்து அரச தலையீட்டினாலேயே நிறுத்துவதற்கான உடனடி நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி**- கூட்டமைப்பின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் என்பது தொடர்பில் பலரதும் பெயர்கள் கூறப்படும் நிலையில் கட்சி யாரையாவது தெரிவு செய்திருக்கின்றதா?

**பதில்** - வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகக் கூட்டமைப்பு யாரை நிறுத்துவது என்று இன்னமும் தீர்மானிக்கவில்லை. பொறுத்திருங்கள். காலம் வரும் போது யார் என்பதை தெரிவிப்போம்.

### முதல்வராக இருக்க தகுதியற்றவர் விக்கி

கேள்வி – அடுத்த மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக மீளவும் விக்னேஸ்வரனை நியமித்தால் நீங்கள் கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவதாகச் சொல்லியிருந்தீர்கள் எனச்செய்திகள் வெளியாகியுள்ளனவே?

பதில் – நான் அப்படியான செய்திகள் ஒன்றையும் வெளியிடவில்லை. ஆனால் ஒரு விடயத்தை நான் சொல்ல வேண்டும். அதாவது கடந்த 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நேரத்தில் கூட்டமைப்பின் முதலமைச்சராக இருந்து கொண்டு கூட்டமைப்புக்கு எதிராக தேர்தலில் அவர் இயங்கியமையை வெளிப்படையாகக் கண்டித்தவன் நான். அவ்வாறு நான் கண்டித்தது நியாயமானது என்பது என்னுடைய வெளிப்பாடு. ஆனாலும் அவ்வாறு நான் அன்றைக்குக் கண்டித்தமையை தவறு என்றும், அதைப்பற்றிப் பேசவேண்டாம் என்றும் சொன்னவர்கள் பலர் இன்றைக்கு அது சரிஎன்று சொல்கின்றார்கள்.

கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களியுங்கள் என்று கேட்டுத் தேர்தலில் நின்று வென்ற பின்னர் அதற்கு அடுத்ததாக நடைபெற்ற தேர்தலில் விக்கி அந்தக் கட்சிக்கு எதிராகவே பிரசாரம் செய்தார். அதுவும் நீங்கள் வீட்டை விட்டு வெளியேறி யாருக்காவது வாக்களியுங்கள் என்று சொன்னவர் எந்தவிதத்திலும் அந்தக் கட்சியில் உறுப்பினராகவோ, அந்தக் கட்சியின் முதலமைச்சராகவோ இருக்கத் தகுதியற்றவர் என்பது என்னுடைய நிலைப்பாடு.

அதனை நான் என்றைக்கும் சொல்வதற்குத் தயங்கவில்லை. தனது மக்களின் சுயமரியாதையை வென்றெடுப்பதற்காகச் செயற்படும் ஒரு கட்சி, தான் சுயமரியாதையை இழந்து செயற்பட முடியாது என்பது எனது சிந்தனை. ஆகவே அவ்வாறு சுயமரியாதையை இழக்கும் கட்சி தொடர்பிலும் சிந்திக்க வேண்டும்.

### சலுகை அரசியல் அல்ல உரித்து அரசியலே தேவை


கேள்வி – நல்லாட்சி அரசைக் கொண்டு வந்ததில் பங்கிருப்பதாக நீங்கள் கூறிக் கொண்டிருக்கையில் நல்லாட்சியில் பங்குதாரர்களாக உள்ள ஏனைய கட்சிகளும் நல்லாட்சியின் பிரதான பங்காளிக் கட்சிகளும் வேலை வாய்ப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுத்து மக்களுக்காகப் பலவற்றைச் செய்யும் போதிலும் நீங்கள் அவ்வாறு செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படு கின்றதே?

பதில் – அரச அதிகாரங்கள் எங்கள் மக்களின் கைகளில் வரும்வரை நாங்கள் இதற்குத் தீர்க்கமான முடிவை எடுப்பதாகச் சொல்ல முடியாது. மத்திய அரசில் தங்கியிருந்து சலுகைகள் என்ற அடிப்படையில் நாங்கள் எங்கள் மக்களுக்குச் சேவை செய்ய முடியாது. அதை நீங்கள் சொன்ன அரசியல்வாதிகள் தொடர்ச்சியாகச் செய்துகொண்டிருக்கின்றார்கள். அது அவர்களுடைய அரசியல். ஆனால் எங்கள் மக்களின் எதிர்பார்ப்பு சலுகை அரசியல் அல்ல. உரித்து அரசியல். எங்கள் கையில்அதிகாரம் இருக்கவேண்டுமென்பதே நீண்ட கால எதிர்பார்ப்பு. அந்த உரித்தைப் பெறவேண்டுமென்பதற்காகவே தான் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களித்திருக்கின்றார்கள். கூட்டமைப்பு அதற்கான வேலைகளை முன்னெடுத்து வருகின்றது. புதிய அரசமைப்பு உருவாக்கம் தான் அதனுடைய அடிப்படையான செயற் திட்டம். அது வெற்றி பெற வேண்டுமென்பதற்காகத் தான் முழு மூச்சாக உழைக்கிறோம்.

சில வேளைகளில் அந்த பேச்சுக்களில் எங்கள் பேரம் பேசும் சக்திகளைக் குறைப்பதற்காக அரசு சலுகைகளை முன்னிறுத்தி எங்களுக்குக் காட்டுகின்றதோ என்ற ஆதங்கங்கள் எங்களிடத்தே உள்ளன. அதனையும் கவனத்தில் எடுத்துத்தான் சலுகைகளை அரசிடம் நாங்கள் கேட்பதில்லை. வேலைவாய்ப்புக்கள் உள்ளிட்ட பல விடயங்கள் சம்பந்தமாகச் சலுகைகளாக நாம் அரசிடம் கேட்காது எங்கள் உரித்தாக நாங்கள் அதனைக் கேட்கிறோம்.

தொகுப்பு: எஸ்.நிதர்ஷன்





## ஆட்சி மாற்றத்தால் தமிழருக்கு ஓரளவு நன்மைகள் கிடைத்துள்ளன

### கொள்கையில் மாற்றம்

மாகாண சபை முறை 1987 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தகின்ற போது தமிழர் விடுதலைக் கூட்டணி அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. 88 ஆம் ஆண்டு இணைந்த வடக்கு – கிழக்கிற்கான மாகாண சபைத் தேர்தலில் கூடப் போட்டியிடவில்லை. ஏனென்றால் இதனை ஒரு தீர்வாக ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் போட்டியிடவில்லை என்று கூறியது. ஆயினும் அதன் பின்னராக பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்துக்கு முதற்தடவையாக தேர்தல் நடந்தபோது கூட்டமைப்பு போட்டியிடவில்லை. ஏனெனில் வடக்கு – கிழக்கைப் பிரித்தமைக்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றோம். ஆகையினால் நாங்கள் போட்டியிடவில்லை என்றோம்.

ஆனால் யுத்தம் முடிவடைந்து பின்னர் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலிலும் அதன் பின்னர் நடந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலிலும் நாங்கள் போட்டியிட்டோம். அந்த வேளையில் எவரும் ஏன் போட்டியிடுகின்றீர்கள் என்ற கேள்வியை எம்மிடம் கேட்கவில்லை. அரசியல் தீர்வு முதல், மற்றையவை எல்லாம் பிறகு என்ற நிலைப்பாட்டில் இருந்து மாறியிருக்கின்றீர்கள் என்றும் யாரும் கேட்கவில்லை. அரசியல் தீர்வு முதல் என்று நாம் முன்னர் இருந்த அதே கோட்பாட்டில் இருந்திருந்தால் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட நாங்கள் போட்டியிட்டிருக்க முடியாது. அந்தக் கொள்கை நிலைப்பாட்டில் நாங்கள் நின்றிருந்தால் விக்னேஸ்வரனும் முதலமைச்சராக வந்திருக்க முடியாது.

ஆனால் அந்தக் காலத்தில் கொள்கை மாற்றம் ஒன்று நடந்தது. அது பெரிய கொள்கை மாற்றம். அந்த மாற்றத்துக்கு எவருமே மறுப்புத் தெரிவிக்கவில்லை. அதற்குக் காரணம் யுத்தத்திற்குப் பின்னரான எமது பிரதேசத்தின் அழிவு. அந்த அழிவுகளில் இருந்து நாங்கள் மீளெழ வேண்டும் என்பதற்காகக் குறைந்த அதிகாரங்களைக் கொண்ட மாகாண சபையைப் பாவித்தாவது எமது மக்களுக்கு நாம் அந்தச் சேவையைச் செய்யவேண்டும், அரசியற் தீர்வு வரும் வரை காத்திருக்காமல் அரசியல் தீர்விற்காக நாங்கள் உழைக்கின்ற அதே வேளையில் குறைந்த அதிகாரங்களைக் கொண்ட மாகாண சபை முறையையும் எமது மக்களின் மீளெழுச்சிக்காக உபயோகிக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காகத் தான் கொள்கையை மாற்றி இரண்டு மாகாண சபைத் தேர்தலிலும் நாங்கள் போட்டியிட்டோம்.

அதே திசையில்தான் இப்போதும் பயணிக்கின்றோம். அதாவது அரசியற் தீர்வுக்காக உழைக்கின்றோம். அபிவிருத்திக்காகவும் உழைக்கின்றோம். அதிலும் அபிவிருத்தி என்று சொல்வதிலும் எமது மக்களை அழுத்தும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் உடனடியாக நாங்கள் தீர்வு காணவேண்டி உள்ளதால் அதற்காக உழைகின்றோம். ஆனபடியால் தான் நாங்கள் ஜனாதிபதி செயலணியிலும் பங்குபற்றுகின்றோம். அதற்கு அபிவிருத்திச் செயலணி என்று பெயர் சொல்லியிருந்தாலும் அங்கு அபிவிருத்தி பற்றி ஏதும் பேசப்படவில்லை. அங்கு பேசியதெல்லாம் எங்கள் மக்கள் நாளாந்தம் சந்திக்கின்ற மிகவும் முக்கியமான பிரச்சினைகள். அதில் இருந்து நில விடுவிப்பு, கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் சம்பந்தமாகவே பேசப்பட்டு இதற்கு ஒரு விடிவு வேண்டுமென்றே வலியுறுத்தப்படுகிறது.


### பேரம் பேசும் சக்தியை இழக்கவேமாட்டோம்

ஆக அரசியல் தீர்வு வரும் வரைக்கும் நாங்கள் இவை பற்றியெல்லாம் பேசமாட்டோம் என்று எவரும் சொல்லவும் இல்லை. எமது மக்களின் விருப்பமும் அதுவல்ல. ஆனபடியால் கொள்கை மாற்றம் நடந்தது ஆறு வருடங்களுக்கு முன்னர். அந்த வேளையில் கேட்காத கேள்விகளை பலர் இப்போது கேட்க ஆரம்பித்திருக்கின்றார்கள். அரசியல் தீர்விற்குப் பிறகு தான் இதை எல்லாம் செய்யவேண்டுமென்று கூறுகின்றனர். அவ்வாறு அரசியல் தீர்வுக்குப் பின்னர் தான் இதை எல்லாம் செய்யவேண்டுமென்று சொன்னால் அவர்களே இந்தப் பதவிகளுக்கு வந்திருக்க முடியாது. ஆனபடியால் இரண்டையும் சமாந்தரமாக நாங்கள் கொண்டு செல்லவேண்டும். பேரம் பேசும் சக்தியை நாங்கள் ஒருபோதும் இழக்கமாட்டோம். அதை இழப்பதற்கான விதத்தில் நாங்கள் மத்தியிடம் சலுகைகளைப் பெற மாட்டோம். மத்திய அரசில் நாங்கள் அமைச்சுப் பதவிகளை எடுக்காமல் இருப்பதற்கும் அடிப்படைக் காரணம் இது தான்.

மக்களிடத்தே அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். அது மக்களால் தேர்தந்தெடுக்கப்படுகின்றவர்கள் கைகளில் இருக்கவேண்டும். அந்த மாற்றத்தை புதிய அரசமைப்பில் கொண்டு வர நாங்கள் எத்தனிக்கின்றோம். அதற்கமைய எல்லா முயற்சிகளையம் நாங்கள் செய்கின்றோம். ஆனால் அதைச்செய்கின்ற இடைப்பட்ட காலத்திலே விசேடமாக யத்தத்தினாலே ஏற்பட்ட பெரும் இழப்பிலிருந்து எமது மக்களை மீண்டெழச் செய்கின்ற காரணத்தால் எல்லா விதமான செயற்பாட்டிலும் நாங்கள் பங்குபெறுகிறோம். (ஜ)

# இது எந்த நாடு?

## வாஸ்கொடகாமாவின் நாடு



கீழே உள்ள குறிப்புகளை வைத்து, அவை உணர்த்தும் நாடு எது என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. தென்மேற்கு ஐரோப்பாவில் உள்ள நாடு. உலகிலேயே மிகப் பழமையான நாடுகளில் இதுவும் ஒன்று.
2. இதன் தலைநகரம் லிஸ்பன். இதுவே மிகப் பெரிய நகரம்.
3. முன்னேறிய பொருளாதாரமும் வாழ்க்கைத்தரமும் கொண்ட நாடு.
4. உலக அளவில் அமைதியான நாடுகள் பட்டியலில் நான்காவது இடம் பிடித்த நாடு. பத்திரிகைச் சுதந்திரம் இங்கே அதிகம்.
5. இந்தியாவுக்கு வந்த முதல் ஐரோப்பிய கடல் பயணியான வஸ்கோடகாமா, இந்த நாட்டைச் சேர்ந்தவர்.
6. ஐரோப்பாவின் மிகப் பழமையான பல்கலைக் கழகங்களில் ஒன்று கோயிம்ப்ரா (Coimbra).
7. தக்கை மரத்தின் தாயகம் இது. மென்மையான இந்த மரத்தின் மூலம் ஏராளமான பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. தக்கை மரப் பொருள்களை உலகில் அதிகம் உற்பத்தி செய்யும் நாடு இதுதான்.
8. லிஸ்பனில் டாகஸ் நதி மீது 17.2 கி.மீ. தூரத்துக்குச் செல்லும் வாஸ்கோட காமா பாலம், ஐரோப்பாவின் மிக நீளமான பாலம்.
9. சேவல் (Rooster of Barcelo) இந்த நாட்டின் தேசியச் சின்னம்.
10. உலகப் புகழ்பெற்ற கால்பந்து வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ, இந்த நாட்டைச் சேர்ந்தவர்.

**விடை: போர்ச்சுக்கல்**

# விடுகதைகளும் விடைகளும்

1. அடிக்காத பிள்ளை அலறித் துடிக்குது. அது என்ன?
   சங்கு
2. தட்டச் சீறும் அது என்ன?
   தீக்குச்சி
3. உரிச்ச புறா சந்தைக்குப் போகுது அது என்ன?
   தேங்காய்
4. நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன?
   தையல் ஊசியும் நூலும்
5. உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன் அவன் யார்?
   எறும்பு
6. கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?
   கரும்பு
7. பிடுங்கலாம் நடமுடியாது அது என்ன?
   தலைமுடி
8. வாலால் நீர் குடிக்கும், வயால் பூச் சொரியும் அது என்ன?
   விளக்கு
9. நன்றிக்கு வால் கோபத்துக்கு வாய் அது என்ன?
   நாய்
10. உயரத்தில் இருப்பிடம். தாகம் தீர்ப்பதில் தனியிடம் அது என்ன?
    இளநீர்
11. தலையில் கீரீடம் வைத்த தங்கப் பழம் அது என்ன?
    அன்னாசிப்பழம்
12. எட்டுக்கால் ஊன்றி இருகால் பட மெடுக்க வட்டக் குடைபிடித்து வாறாராம் வன்னியப்பு அது என்ன?
    நண்டு
13. படபடக்கும், பளபளக்கும் மனதுக்குள் இடம் பிடிக்கும் அது என்ன?
    பட்டாசு
14. சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம் அது என்ன?
    நுளம்பு

# கண்டுபிடிப்புகளின் கதை:

## சாக்லெட்





ஜோசப் ஃப்ரை

உலகம் முழுவதும் பரவலாகச் சுவைக்கப்படும் ஓர் இனிப்புப் பொருள் சாக்லெட்தான். டார்க் சொக்லெட், மில்க் சாக்லெட், நட்ஸ் சொக்லெட், ட்ரை ஃப்ரூட் சொக்லெட் என்று விதவிதமான சாக்லெட்கள் வந்துவிட்டன.

சொக்லெட் என்றதும் நம் நினைவுக்கு வருவது கட்டியாகச் சுவைத்துச் சாப்பிடக் கூடிய இனிப்புப் பொருள்தானே! ஆனால் கொக்கோ விதைகளிலிருந்து பெறப்படும் அனைத்துப் பொருள்களுக்குமே சாக்லெட் என்றுதான் பெயர். சாக்லெட்டின் வரலாற்றில், பெரும்பாலும் சாக்லெட் என்பது குடிக்கக்கூடிய பானமாகவே இருந்திருக்கிறது. கடந்த இரு நூற்றாண்டுகளுக்குள்தான் கடிக்கக்கூடிய சொக்லெட் உருவாகியிருக்கிறது.

மத்திய அமெரிக்காவில்தான் கொக்கோ மரங்கள் செழித்து வளர்ந்தன. 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இன்றைய மெக்சிகோ பகுதியில் வாழ்ந்த மக்கள், கொக்கோவைப் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டனர். மாயன் மக்களும் அஸ்டெக் மக்களும் கொக்கோவுக்கு மந்திர சக்தி இருக்கின்றன என நம்பினர்.

அதனால் குழந்தை பிறப்பு, திருமணம், இறப்பு போன்ற முக்கியமான நிகழ்ச்சிகளின்போது, கொக்கோவைப் பயன்படுத்தினர். விலைமதிப்புமிக்கப் பொருளாகக் கருதப்பட்ட கொக்கோ விதைகளைக் கொடுத்து, தேவையான பொருட்களையும் வாங்கிக்கொண்டனர்.

கொக்கோ விதைகளை வறுத்து, பொடித்து, தண்ணீரில் கலந்து குடித்தால் உடலுக்கு நல்லது என்று நினைத்தனர். ஆனால் இந்தக் கொக்கோ பானம் சுவையாக இல்லை, மிகவும் கசப்பாக இருந்தது. பிறகு இந்தப் பானத்தில் தேன், மிளகாய், மிளகு போன்றவற்றைச் சேர்த்துக் குடித்தனர். இது 'கடவுளின் பானம்' என்றும் அழைக்கப்பட்டது.

அஸ்டெக் மன்னரைச் சந்திக்க ஸ்பெயினைச் சேர்ந்த பயணி ஹெர்னாண்டோ கோர்டெஸ் வந்தார். அவரை வரவேற்று விருந்து அளிக்கப்பட்டது. அந்த விருந்தில் கொக்கோ பானமும் இருந்தது. அதை முதல்முறை சுவைத்த ஹெர்னாண்டோவுக்குச் சுவை பிடிக்கவில்லை. இப்படி ஒரு கசப்பான பானத்தை எப்படிக் கடவுளின் பானமாகச் சுவைக்கிறார்கள் என்று தோன்றியது.

சாக்லெட் பானத்துடன் ஸ்பெயின் வந்து சேர்ந்தவர், 'இந்தப் பானம் பன்றிகளுக்கானது' என்று எழுதினார். ஆனால், கொக்கோ பானத்தில் தேனையும் சர்க்கரையையும் சேர்த்துச் சுவைத்தவர்கள் பிரமாதமாக இருப்பதாகக் கூறினார்கள். அப்போதும் செல்வந்தர்களின் பானமாகத்தான் கொக்கோ இருந்தது.

17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அதிக அளவில் மற்ற நாடுகளுக்கு கொக்கோ அனுப்பி வைக்கப்பட்டது. இதன்மூலம் ஐரோப்பா முழுவதும் சொக்லெட் பானம் பரவியது.

1828 ஆம் ஆண்டு டச்சு நாட்டைச் சேர்ந்த வேதியியலாளர், கொக்கோ விதைகளைத் தூளாக்கி, அவற்றிலிருந்து கொக்கோ வெண்ணெய்யின் அளவைப் பாதியாகக் குறைத்தார். கார உப்புகள் சிலவற்றைச் சேர்ந்தார். இதன் மூலம் கசப்புச் சுவை மறைந்தது. இவரது பானத்தை 'டச்சு கொக்கோ' என்று அழைத்தனர்.


ஃபிரான்கோய்ஸ் லூயி கைலர் என்ற 23 வயது ஸ்விசர்லாந்துக்காரர், திட வடிவில் சொக்லெட்டை உருவாக்கினார். பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளுக்கும் இவர் மூலம் திட சாக்லெட் பரவியது.

1847 ஆம் ஆண்டு இன்றைய நவீன சொக்லெட்டை உருவாக்கியவர் ஜோசப் ஃப்ரை. கொக்கோ தூளைப் பசையாக மாற்றி, வெண்ணெய்யைக் கலந்து, அச்சுகளில் ஊற்றி திட சொக்லெட்டை உருவாக்கினார்.

1868ஆம் ஆண்டு இங்கிலாந்தில் கேட்பரி என்ற சிறிய நிறுவனம் மிட்டாய்களையும் சொக்லெட்களையும் பெட்டிகளில் அடைத்து விற்பனை செய்ய ஆரம்பித்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு மில்க் சாக்லெட்டை அறிமுகம் செய்தது. அது மக்களை மிகவும் கவர்ந்துவிட்டது. நெஸ்லே என்ற நிறுவனமும் சொக்லெட் தயாரிப்பில் இறங்கியது. அமெரிக்காவிலும் சொக்லெட் நிறுவனங்கள் தோன்றி, மிகப் பெரிய வியாபார நிறுவனங்களாக மாறின. ஓர் அமெரிக்கர் ஒரு மாதத்தில் குறைந்தது 1/4 கிலோ சாக்லெட்டையாவது சுவைக்கிறார்.

சொக்லெட் குறைந்த விலையில் கிடைப்பதால், உலகம் முழுவதும் செல்வாக்குப் பெற்ற இனிப்பாக வலம் வருகிறது. வீட்டிலேயே சொக்லெட்களை உருவாக்கும் விதத்தில் அதன் தயாரிப்பு முறையும் எளிதாகிவிட்டது. இனி சொக்லெட்டைச் சுவைக்கும்போது, சாக்லெட்டின் கதையையும் நினைத்துப் பாருங்கள்.

# நாய் தன் வீடு செல்ல வழி காட்டுங்கள்



# உலர்பழங்களை அடிக்கடி சாப்பிடலாமா..??

உலர் பழங்களை அடிக்கடி சாப்பிடுவது இன்று பலரது வழக்கமாகி வருகிறது. உணவு இடைவேளையின் போது சாப்பிடும் அளவிற்கு இருந்த உலர் பழங்களைப் பலரும் தினசரி சாப்பாடாகவே உட்கொள்கின்றனர். அந்த வகையில் உலர் பழங்களை சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் பாதிப்புகளை குறித்து பார்க்கலாம்.

பழங்களில் அதிகளவு நார்சத்து (ஃபைபர்) உள்ளது. மேலும் அவற்றை உலர்ந்த நிலையில் உண்ணும் போது, அதனுடைய சத்துகள் பன்மடங்கு அதிகமாக கிடைக்கும். ஆனால் அளவுக்கு அதிகமாக நார்சத்து நிறைந்த உலர் பழங்களை சாப்பிட்டால், தசைப்பிடிப்பு மற்றும் ஆங்காங்கு உடல் வீக்கம் ஏற்படலாம்.

பழங்கள் உலர்ந்து நிலையை அடையும் போது அது செறிவான பதத்திற்கு மாறுகின்றன. இதன் காரணமாக அதில் சக்கரை சத்துகள் அதிகமாக இருக்கும். சக்கரைச் சத்துக்கள் அதிகமாக உட்கொள்ளும் போது தலைவலி மற்றும் உடல்செறிமானம் ஏற்படும்.

எண்ணெய்யில் பொரித்த உணவுகளை தீனியாக சாப்பிடுவதை விட உலர் பழங்களை அடிக்கடி சாப்பிடலாம். ஆனால் மைதாவில் வைத்து சமைக்கப்பட்ட உணவுகளோடு உலர் பழங்களை சாப்பிட



வேண்டாம்.

உலர்ந்த நிலையில் இருக்கும் பழங்களை தண்ணீரோடு ஊற வைத்துச் சாப்பிடலாம். ஆனால் அதை அதிகமாகச் சாப்பிடுவது வயிறு கோளாறு ஏற்படலாம்.

உலர் பழங்களில் அதிகளவில் புரதச்சத்து உள்ளது. ஆனால் அவற்றை அளவுடன் சாப்பிடுவது சாலச் சிறந்தது.

# இலங்கை கடற்பரப்பில் பெற்றோலிய வள ஆய்வுக்கான பணிகள் ஆரம்பம்

இலங்கைக்கு சொந்தமான கடற்பரப்பில் உள்ள பெற்றோலிய வளங்களை ஆய்வு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த ஆய்வு திட்டத்தின் கீழ் கடல் பரிமாண நில அதிர்வு தரவுகள் சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

BGP Pioneer என்ற கப்பல் இந்த பணிகளை ஆரம்பிப்பதற்காக நேற்றுமுன்தினம் காலை கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் தலைமையில் இடம்பெறுகின்றன.

இதேவேளை, மன்னார் உள்ளிட்ட கடற்பரப்பில் பெற்றோலிய வளம் உள்ளமை ஏற்கனவே, கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், மேலதிக பகுதிகளை ஆய்வு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கைத் தீவு பல்வேறு அதிசய அம்சங்களை கொண்டுள்ளது. இதன் காரணமாகவே இலங்கையைத் தன்னகத்தில் வைத்திருக்க அமெரிக்கா, சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் கடும் போட்டி போட்டு வருகின்றன எனக் கூறப்படுகிறது.

# போலி அரச செயலகம் நிட்டம்புவவில் சுற்றிவளைப்பு

## 32 வயதுடைய நபர் கைது

நிட்டம்புவ கலகெடிஹேன பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் இயங்கிவந்த போலி அரச நிறுவனமொன்றை பொலிஸார் சுற்றிவளைத்தனர்.

இந்த நிறுவனத்தில் அரச செயலகம் ஒன்றினால் வழங்கப்படும், உறுதிப்படுத்தப்படும் பத்திரங்கள் என்பன போலியாக தயாரித்து விநியோகிக்கப்பட்டு வந்துள்ளன எனத் தெரிய வருகிறது.

119 ஆம் இலக்கத்துக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றின் பேரிலேயே இந்நிலையம் சுற்றிவளைக்கப்பட்டது என்றும் இதன்போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

5 இறப்பர் முத்திரைகள், கணினியொன்று, பிரின்டர் ஒன்று மற்றும் அரச காரியாலயத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்களின் பிரதிகள் என்பன இந்நிலையத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள 32 வயதுடைய நபர் அத்தனகல்லை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# வீட்டில் திடீரென தீ பெண் கொன்ஸ்டபிள் சாவு

## சம்பவம் குறித்து பொலிஸ் சந்தேகம்

பதுளை – ஹாலிஎல கெட்டவெல ஜகுல்ல பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் பெண் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது என ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் பாணந்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவில் பணிபுரியும் 23 வயதுடைய ஹாலிஎல கெட்டவெல ஜகுல்ல பகுதியைச் சேர்ந்த சந்திமா பியதர்ஷினி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விடுமுறையில் வீட்டுக்கு வந்திருந்த இந்தப் பெண் நேற்று முன்தினம் பகல் நேரத்தில் சாப்பாடு பார்சல் ஒன்றையும் தனது வீட்டிற்கு எடுத்துச் சென்றுள்ளார்.

அதன் பின்னே இவ்வாறு அவரது வீட்டில் தீ அனர்த்தம் ஏற்பட்டுள்ளதோடு, பெரும் முயற்சிக்கு மத்தியில் பிரதேசவாசிகள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். எனினும், இந்த பெண் கொன்ஸ்டபிள் இந்த தீ விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் சந்தேகம் நிலவுவதாக தெரிவித்த ஹாலிஎல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இரட்டை பிரஜாவுரிமை கொண்ட எவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தடை!

## புதிய சட்டம் விரைவில் வரும்

கொழும்பு, செப். 03

இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றமையை தடுக்கும் வகையிலான புதிய சட்டமொன்று உருவாக்கப்பட உள்ளது.

தற்போதைய அரசு இது தொடர்பிலான சட்டமொன்றை அறிமுகம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலான கட்டளைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட உள்ளன.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதனை முடக்கும் நோக்கில் புதிய சட்டம் உருவாக்கப்பட உள்ளது.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டுமாயின் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஓராண்டுக்கு முன்னதாக இரட்டைக் குடியுரிமையை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்யும் போதே இந்த இரட்டைக் குடியுரிமையை அகற்றிக் கொண்டமைக்கான ஆவணத்தையும் சமர்ப்பிக்க வேண்டுமென சட்டத்தில் குறிப்பிடப்பட உள்ளது.

இந்தச் சட்டம் உருவாக்குவது குறித்து அரச தரப்பினரும் சட்ட ஆலோசகர்களும் ஆராய்ந்து வருகின்றனர் என தென்னிலங்கை ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ இரட்டைக் குடியுரிமை கொண்டவர் என்பதுடன், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மஹிந்த அணி அடாவடியில் ஈடுபட்டால் விளைவு மோசமாகும்: மத்தும பண்டார!



அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் எனும் போர்வையில் நாளை மறுதினம் புதன்கிழமை கூட்டு எதிர்க் கட்சியினரால் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கையின் போது பொது மக்களுக்கு எதிரான வன்முறை, அடாவடியான செயல்களில் ஈடுபட்டால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்ஜித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசில் நாட்டின் எந்தவொரு இடத்திலும் யாருக்கும் ஆர்ப்பாட்டம், போராட்டங்கள் என்பவற்றை நடாத்த ஜனநாயக ரீதியில் உரிமை உள்ளது. இருப்பினும், ஜனநாயகம் எனும் போர்வையில் வன்முறையான விதத்தில் செயற்படுவதற்கோ, அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதற்கோ முற்படுவார்களாக இருந்தால் பொலிஸார் சட்டத்தை சரியாகப் பின்பற்ற வேண்டியிருக்கும்.

எது எப்படிப் போனாலும், பொலிஸார் இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளனர் என்றும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## ஆர்ப்பாட்டம் எந்த இடத்தில்? அறிவிப்பு நாளையே!

கொழும்பு, செப். 03

அரசுக்கு எதிராநாளை மறுதினம் புதன்கிழமை கொழும்பில் நடத்தத்திட்டமிடப்பட்டுள்ள ஆர்ப்பாட்டம், எந்த இடத்தில் இடம்பெறும் என்பதை நாளை 4 ஆம் திகதி அறிவிக்கப்படும் என கூட்டு எதிர்க் கட்சி தெரிவித்துள்ளது.

அரசை ஆட்சி கவிழ்க்கச் செய்யும் விதத்தில் மக்கள் போராட்டமாக இந்த ஆர்ப்பாட்டத்தை கூட்டு எதிர்க் கட்சி ஏற்பாடு செய்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடத்தை முன்னதாக அறிவித்தால், அரசு அதனைத் தடுக்க நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக் கொள்ளும் எனவும், இதனாலேயே தாமதித்து எந்த இடத்தில் நடாத்துவது என்பதை அறிவிக்க தீர்மானித்துள் ளோம் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வீட்டுக்குள் புகுந்த சருகுபுலி; மடக்கிப் பிடித்த மக்கள்!

அம்பாறை திருக்கோவில் வனஜீவராசிகள் அலுவலகத்திற்குட்பட்ட தம்பிலுவில் – 02 சங்கன் விதானை வீதியில் அமைந்துள்ள வீடொன்றிற்குள் நேற்று முன்தினம் நள்ளிரவு புலி இனத்தைச் சேர்ந்த விலங்கொன்று (சருகுபுலி) புகுந்ததில் வீட்டில் உள்ளவர்கள் பீதியடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டார் தெரிவிக்கையில் –

தாம் உறங்கிக் கொண்டு இருந்த வேளை எமது சுவாமி அறைக்குள் பொலித்தீனால் மூடப்பட்டிருந்த ஜன்னல் வழியாக யாரோ விழுந்தது போல் சத்தம் கேட்டதையடுத்து. திருடன் என்ற சந்தேகத்துடன் அயலவர்களின் உதவியுடன் அறையை சோதனையிட்ட போது இந்த புலி சீறிக் கொண்டு எம் மீது பாய்ந்தது. .

இதனையடுத்து சுமார் இரண்டு மணிநேர போராட்டத்துக்குப் பின் இந்த சருகு புலியை மடக்கிப் பிடித்தோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.



அதன் பின்னர் திருக்கோவில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் இந்த புலி திருக்கோவில் வட்டமடு காட்டில் கொண்டு சென்று விடப்பட்டது என வனஜீவராசிகள் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பஸ் நிலைய இரு மாடிக் கட்டடம்; அமைச்சர் சம்பிக்க அடிக்கல் நடுகை



கொழும்பு, செப். 03

கினிகத்தேன பஸ் தரிப்பிடம் மற்றும் 16 வர்த்தக நிலையங்களுக்கான அடிக்கல் நடும் விழா மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் முன்னிலையில் இடம்பெற்றது.

கினிகத்தேன நகரில் உள்ள பஸ்தரிப்பிடத்தை நவீன முறையில் புனரமைக்கும் நோக்கில் இரண்டு மாடி கட்டடங்களையும் 16 வர்த்தக நிலையங்களுக்குமான அடிக்கல் நடுகை விழா நேற்று மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் ஆரம்பித்து வைக்கபட்டது.

இவ் வேலைத்திட்டத்திற்காக 9கோடி ரூபா நிதி, மாநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சரால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் போது மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க மற்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.பியதாச மற்றும் பலரும் கலந்து கொண்டனர் .

# ஏமனில் 40 குழந்தைகளின் உயிரை பறித்த விமான தாக்குதலுக்கு சவூதி வருத்தம்

ஏமன் நாட்டில் 40 குழந்தைகள் உள்பட 51 உயிர்களை பறித்த விமான தாக்குதலுக்கு சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படைகள் வருத்தம் தெரிவித்துள்ளன.

ஏமனில் உள்ள ஹவுத்தி போராளிகள் சவூதியின் ஜிசான் நகரின் மீது கடந்த மாதம் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் சடா நகரின் பிரபல சந்தைப் பகுதியின் மீது வான்வழி தாக்குதல்களில் ஈடுபட்டன.





பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் மிக தாழ்வாக பறந்து சென்ற போர் விமானங்கள் நடத்திய தாக்குதலின்போது அவ்வழியாகச் சென்ற பஸ் மீது பல ஏவுகணைகள் வீசப்பட்டன. இந்தத் தாக்குதலில் 40 குழந்தைகள் உட்பட 51 பேர் உயிரிழந்தனர். 51 குழந்தைகள் உட்பட 79 பேர் படுகாயம் அடைந்தனர்.

குழந்தைகள் சென்ற பஸ் மீது நடத்தப்பட்ட இந்த மனிதாபிமானமற்ற தாக்குதல் தொடர்பாக நியாயமான சர்வதேசக் குழுவினரின் விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது. இந்த தாக்குதலின்போது பயன்படுத்தப்பட்ட ஏவுகணைகள் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டவை என பின்னர் தெரியவந்தது.

இந்நிலையில், இந்த தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திய சவூதி தலைமையிலான கூட்டுப்படையைச் சேர்ந்த உயரதிகாரிகள் தங்கள் பக்கம் தவறுகள் உள்ளன என வருத்தம் தெரிவித்தமையுடன், இதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர். (கு)

# நைஜீரியாவில் போக்கோஹரம் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 30 ராணுவ வீரர்கள் பலி!



நைஜீரியாவில் போக்கோஹரம் அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் ராணுவ வீரர்கள் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் சம அளவில் வாழ்ந்து வரும் நைஜீரியா நாட்டில் இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சியை கொண்டுவர வேண்டும் என்று போக்கோஹரம் அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதிகள் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கமான போக்கோஹரம் பயங்கரவாதிகளுக்கும், நைஜீரிய ராணுவத்தினருக்கும் இடையே நீண்ட நாள்களாக பிரச்சினை நடந்து வருகிறது.

இந்த நிலையில், அந்த நாட்டின் வடகிழக்கு எல்லைப் பகுதியில் உள்ள ஜாரி எனும் கிராமத்தில் அமைந்துள்ள நைஜீரிய ராணுவ தளத்தின் மீது போக்கோஹரம் பயங்கரவாதிகள் கடந்த வியாழன் அன்று கடும் தாக்குதல் நடத்தினர்.

பல்வேறு வாகனங்களில் ஆயுதங்களுடன் வந்த பயங்கரவாதிகள் வீரர்கள் மீது கண்மூடித்தனமாக நடத்திய தாக்குதலில் 30 ராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு ராணுவத்தை சேர்ந்த உயர்அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பாகிஸ்தானில் பிரதமரின் சொகுசு கார்கள் ஏலம்!

பாகிஸ்தானில் பிரதமரின் சொகுசு வாகனங்கள் அனைத்தையும் ஏலத்தில் விற்பனை செய்ய இம்ரான்கான் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஏலம் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறுகிறது.

பாகிஸ்தான் பொருளாதார நெருக்கடியில் உள்ளது. அந்த நாட்டின் நிர்வாகத்தை நடத்துவதற்கு 9 பில்லியன் டொலர் (சுமார் 63 ஆயிரம் கோடி இந்திய ரூபா) நிதி தேவைப்படுகிறது என அந்த நாட்டின் நாடாளுமன்ற செனட் சபையில் பேசிய நிதி அமைச்சர் ஆசாத் உமர் தகவல் வெளியிட்டார். பாகிஸ்தானில் மாற்றங்களை கொண்டு வருவேன் என வாக்குறுதி அளித்துள்ள புதிய பிரதமர் இம்ரான்கான் சிக்கன நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

முதலில் பிரதமருக்கான அதிகாரப் பூர்வ பங்களாவில் தான் வசிக்கப்போவதில்லை என அறிவித்தார். தனக்கு 2 ஊழியர்கள் போதும், 2 கார்கள் போதும் எனக் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமருக்கு நிறைய சொகுசு கார்கள் இருக்கின்றன. அவற்றில் விலை உயர்ந்த 8 பி.எம். டபிள்யு கார்கள், 4 மெர்சிடஸ் பென்ஸ் கார்கள், குண்டு துளைக்காத லேண்ட் குரூசர் வாகனங்கள் 4, 2003 – 2013 மொடல் கார்கள் 8 அடங்கும். இந்த வாகனங்கள் அனைத்தையும் ஏலத்தில் விற்பனை செய்து அரசின் கருவூலத்தில் சேர்க்க இம்ரான்கான் அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கான ஏலம் எதிர்வரும் 17 ஆம் திகதி இஸ்லாமாபாத்தில் நடைபெறவுள்ளது.

## சீக்கியர் மீது இனவெறி தாக்குதல்;

# அமெ. விமானப்படை வீரர் குற்றவாளி எனத் தீர்ப்பு!

வொஷிங்டன், செப். 03

2016 ஆம் ஆண்டு மெக்தாப் சிங் பக்ஷி என்ற சீக்கியர் இனவெறி தாக்குதலுக்கு ஆளான வழக்கில் அமெரிக்க விமானப்படை வீரர் குற்றவாளி என நீதிபதி தீர்ப்பு அளித்தார்.

அமெரிக்காவில் வொஷிங்டன் நகரின் டுபோண்ட் சர்க்கிள் பகுதியில் 2016 ஆம் ஆண்டு, ஒகஸ்ட் மாதம், 21 ஆம் திகதி மெக்தாப் சிங் பக்ஷி என்ற சீக்கியர் இனவெறி தாக்குதலுக்கு ஆளானார்.

அவர் அந்தப் பகுதியில் தனது நண்பர்களுடன் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அவருக்கு பின்னால் நடந்து வந்து கொண்டிருந்த அமெரிக்க விமானப்படை வீரரான திலான் மில்ஹாசன் என்பவர், அவரது தலைப்பாகையை பிடித்து இழுத்ததுடன், அவரது முகத்தில் சரமாரியாக குத்து விட்டார். இதில் அவர் மயங்கிச் சரிந்தார். இது இனவெறித் தாக்குதல் ஆகும்.

இது தொடர்பாக மெக்தாப் சிங் பக்ஷி புகாரின் பேரில், பொலிஸார் வழக்கு பதிவு செய்து, திலான் மில்ஹாசனை கைது செய்தனர்.

இந்த வழக்கில் அவர் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதால், அவர் குற்றவாளி என நீதிபதி தீர்ப்பு அளித்தார். அவருக்கு விதிக்கப்படும் தண்டனை குறித்த விவரம், நவம்பர் 30 ஆம் திகதி அறிவிக்கப்படும். அவருக்கு 15 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்க வாய்ப்பு உள்ளது.

# பாக். உயர்நீதிமன்றின் முதல் பெண் தலைமை நீதிபதி பதவியேற்பு!



பாகிஸ்தானில் முதல்முறையாக உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக தாஹிரா சப்தார் எனும் பெண் நீதிபதி நேற்றுமுன்தினம் பதவியேற்றார்.

இந்த நிலையில், பலுசிஸ்தான் மாகணத்தில் உள்ள ஆளுநர் மாளிகையில் அவர் தலைமை நீதிபதியாக பதவியேற்றுக் கொண்டார். இதனால், அந்த நாட்டு உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதி எனும் பெருமைக்கு சொந்தக்காரராகியுள்ளார் தாஹிரா சப்தார்.

கடந்த 1982 ஆம் ஆண்டு முதல் பெண் சிவில் நீதிபதியாக பதவியேற்ற இவர், 1991 ஆம் ஆண்டு கூடுதல் மாவட்ட நீதிபதியாக பதவியேற்றார். அதன் பின்னர் 1996 ஆம் ஆண்டு முதல் பெண் மாவட்ட நீதிபதியாக அவர் பதவி உயர்வு பெற்றார்.

இதற்கிடையே, கடந்த 2009 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக பணியாற்றிய இவர், தற்போது பாகிஸ்தான் உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியாக பதவியேற்றுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் மீது கடந்த 2007 ஆம் ஆண்டு தொடுக்கப்பட்ட தேசத் துரோக வழக்கை விசாரித்து வரும் சிறப்பு நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளில் தாஹிரா சப்தாரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிலி நாட்டில் உருவாகி வரும் உலகின் அதி நவீன தொலைநோக்கி



விண்வெளியை பல மடங்கு துல்லியமாகப் படம் பிடிக்கக்கூடிய உலகின் அதி நவீன தொலைநோக்கி சிலி நாட்டில் உருவாக்கப்பட்டு வருகிறது.

உலகின் மிகப் பெரிய தொலைநோக்கியாக அமையும் இந்த 'ஜெயன்ட் மெக்கல்லன் டெலஸ்கோப்', எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும் என்று கூறப்படுகிறது.

இதைப் பயன்படுத்தி, விண்ணியல் ஆய்வாளர்கள் பண்டைய பிரபஞ்சம் மற்றும் வேற்றுக்கிரக உயிர்கள் பற்றி ஆராய முடியும் என நம்பப்படுகிறது.

சிலி மலைத்தொடரில் கட்டுமானப் பணியாளர்கள் இந்த 100 கோடி டொலர் செயல்திட்டத்துக்கான அடிப்படைப் பணிகளை சமீபத்தில் தொடங்கிவிட்டனர்.

அட்டகாமா பாலைவனத்தில் உள்ள லாஸ் காம்பானஸ் ஆய்வகத்தில், புதிய தொலைநோக்கி சார்ந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பகுதி, பூமியின் உலர்வான, உயர்வான பகுதிகளில் ஒன்று. எனவே வருடம் முழுவதும் ஆய்வாளர்கள் தெளிவான இரவு வானத்தைக் கவனிக்க முடியும் என நம்பப்படுகிறது.

# அமைச்சர் விஜயபாஸ்கரை நீக்க வேண்டும்; ஆளுநரிடம் மு.க. ஸ்டாலின் வேண்டுகோள்!

அமைச்சர் விஜயபாஸ்கரை நீக்க வேண்டும் என்று தமிழக ஆளுநரிடம் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலின் போது நடைபெற்ற வருமான வரித்துறை சோதனையின் போது சத்துணவு அமைப்பாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் பெயருடன் பிரவுன் கவரில் இருந்த 20 லட்சம் ரூபா கைப்பற்றப்பட்டது என்றும் அந்தப் பணத்தைத்தான் பெற்றுக்கொண்டேன் என்றும் அமைச்சர் விஜயபாஸ்கரின் தந்தை ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள்ளார் என்று வெளிவந்துள்ள செய்திகள் ஏற்கனவே அமைச்சர் விஜயபாஸ்கர் இந்த குட்கா விவகாரத்தில் வாங்கிய லஞ்சத்தையும், அமைச்சர் பதவியிலும் பெற்றுள்ள லஞ்சத்தையும் மேலும் உறுதி செய்திருக்கிறது.

சி.பி.ஐ. விசாரணையில் இருக்கின்ற நிலையில், அரசு பணிகளிலும் அமைச்சரின் தந்தையே லஞ்சம் பெற்றதை ஒப்புக் கொண்ட பிறகும், ரூ.20 கோடிக்கு மேல் லஞ்சம் வசூல் செய்த பட்டியல் சிக்கிய பிறகும் அமைச்சர் இன்னும் பதவியில் நீடிப்பது



அரசியல் சட்டத்திற்கு விரோதமானது மட்டுமல்ல, சகித்துக்கொள்ள முடியாதது.

குட்கா ஊழலில் சம்பந்தப்பட்டுள்ள அமைச்சரும், பொலிஸ் டி.ஜி. பி.யும் பதவியில் தொடர்ந்து கொண்டிருப்பதுபோல், இப்போது வருமான வரிச் சோதனையில் வெளி வந்துள்ள மெகா ஊழலுக்குப் பிறகும் பதவியில் நீடிக்க சுகாதாரத் துறை அமைச்சர் முயற்சி செய்வது அரசியல் சட்டத்திற்கு செய்யும் துரோகமாகும்.

ஆகவே, இனியும் எவ்வித காலதாமதமும் செய்யாமல் அமைச்சர் விஜயபாஸ்கர் உடனடியாக பதவி விலகிட வேண்டும். அவர் பதவி விலக மறுத்தால் முதலமைச்சர் உடனடியாக அமைச்சர் விஜயபாஸ்கரை வெளியேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழக ஆளுநர், விஜயபாஸ்கரை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## இடைத்தேர்தலோடு தினகரன் அணி காணாமல் போகும்: துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் திட்டவட்டம்!



திருவாரூர், திருப்பரங்குன்றம் தொகுதி இடைத்தேர்தலோடு டிடிவி தினகரன் அணி காணாமல் போய்விடும் என்று தமிழக துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

பூலித்தேவன் வாழ்ந்த நெற்கட்டும் செவல் பகுதி சுற்றுலா தலமாக அறிவிக்கப்பட்டு, அதன் மேம்பாட்டுக்காக ரூ.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் தாமிரபரணி புஷ்கரணி விழாவை அரசு விழாவாக நடத்த ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. ஆறுகளில் கழிவுகள் கலக்கப்படுகின்றமையை தடுக்கும் வகையில், கழிவுகளை ஆர்.ஓ. முறை மூலம் சுத்திகரிக்கும் செயல்பாடுகள் நடை பெற்று வருகின்றன. அந்த வகையில் தாமிர பரணியிலும் கழிவுகள் கலப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் லோக் ஆயுக்தா உறுதியாக அமைக்கப்படும். டிடிவி. தினகரன் பகல் கனவு கண்டு, பலவாறு பிதற்றி வருகிறார்.

திருவாரூர் முதல் திருப்பரங்குன்றம் வரை அனைத்து இடைத்தேர்தலிலும் அ.தி.மு.க. மாபெரும் வெற்றி பெறும். இந்த தேர்தலோடு தினகரன் அணி காணாமல் போய்விடும். அ.தி.மு.க. தலைமையில்தான் தேர்தல் களத்தில் கூட்டணி ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பினார் விஜயகாந்த்!



உடற் பரிசோதனைக் காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தற்போது வீடு திரும்பி உள்ளார்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் சமீபத்தில் மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றுவிட்டு சென்னை திரும்பினார்.

இந்த நிலையில் கடந்த 31ஆம் திகதி சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு சிறுநீரக பிரச்சினைக்காக சிகிச்சை அளித்து வருகிறோம் என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையே விஜயகாந்த் உடல்நிலை குறித்து வதந்திகள் பரவின. இதையடுத்து விஜயகாந்துக்கு வழக்கமான மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. விரைவில் அவர் வீடு திரும்புவார். வதந்திகளை நம்ப வேண்டாம் என்று கட்சி அலுவலகம் தெரிவித்தது.

இதே போல் விஜயகாந்தின் மகன் பிரபாகரனும் உருக்கமாக பேசிய வீடியோவை வெளியிட்டார். அதில், விஜயகாந்த் நலமாக இருக்கிறார். வதந்திகளை யாரும் பரப்ப வேண்டாம்.

அமெரிக்காவில் முதல்கட்ட சிகிச்சையை முடித்து விட்டார். அடுத்த கட்ட சிகிச்சைக்காக 4 மாதங்களில் அங்கு செல்ல உள்ளார். வதந்திகளை யாரும் நம்பாதீர்கள் என்று கூறி இருந்தார்.

இதற்கிடையே நேற்றுக் காலை சிகிச்சை முடிந் விஜயகாந்த் தற்போது வீடு திரும்பி உள்ளார்.

## நாட்டின் பொருளாதாரத்தை கண்ணிவெடி மீது நிறுத்திச் சென்றது காங்கிரஸ்: பிரதமர் மோடி!

தபால் வங்கிச் சேவையை துவக்கி வைத்து பேசிய பிரதமர் மோடி, 2014 ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதாரத்தை கண்ணிவெடி மீது நிறுத்தி விட்டு காங்கிரஸ் சென்றது என விமர்சித்துள்ளார்.

தபால் வங்கி சேவையை நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் துவக்கி வைத்த பிரதமர் மோடி, இந்தியாவில் வாராக்கடன்கள் அனைத்தும் முந்தைய காங்கிரஸ் ஆட்சி காலத்தில் வழங்கப்பட்டன எனத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

கடந்த 2008 ஆம் ஆண்டு வரை 18 லட்சம் கோடி ரூபாய் மட்டுமே கடனாக அளிக்கப்பட்டு இருந்தது. அடுத்த 6 ஆண்டுகளில் 52 லட்சம் கோடியாக உயர்ந்த து .

பணம் மீண்டும் வராது என்று தெரிந்தே வங்கி ஊழியர்கள் ஆட்சியில் இருந்த அந்தக் குடும்பத்தின் உத்தரவுக்கு கீழ் படிந்தனர்.

மேலும், 2014 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகுதான் நாட்டின் பொருளாதாரத்தை காங்கிரஸ் கண்ணிவெடி மீது நிறுத்தி விட்டு சென்றதை நாங்கள் உணர்ந்துள்ளோம். மேலும், பா.ஜ.க.வின் இந்த 4 ஆண்டுகால ஆட்சியில் அனைத்து வங்கி



கடன்களும் முறையாக விதிமுறைகளுக்கு உட்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

## குடியரசுத் தலைவர் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம்

டில்லியில் இருந்து விமானம் மூலம் புறப்பட்ட ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் சிப்ரஸ் பல்கேரியா மற்றும் செக் குடியரசு போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கு 8 நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்கிறார்.

குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் 8 நாள் உத்தியோகபூர்வ பயணமாக ஐரோப்பிய நாடுகளுக்கு நேற்று புறப்பட்டுச் சென்றார். தனது பயணத்தின் முதல் நாடாக நேற்று முதல் நாளை வரை சிப்ரஸ் நாட்டுக்கு சென்று அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்ற உள்ளார்.

அதைத் தொடர்ந்து, செப்ரெம்பர் முதல் 6 ஆம் திகதி வரை பகேரியா செல்லும் அவர், இந்த பயணத்தில் செப்ரெம்பர் 5 ஆசிரியர் தினத்தன்று அந்நாட்டில் உள்ள சோபியா பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் முன்னிலையில் உரையாற்ற உள்ளார்.



பயணத்தின் மூன்றாம் கட்டமாக 6 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை செக் குடியரசு நாட்டிற்கு குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் பயணம் மேற்கொள்ள உள்ளார்.

## மாடு முட்டி பா.ஜ.க. எம்.பி படுகாயம்; தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார்!

குஜராத் மாநிலம் பதான் தொகுதி எம்.பியாக உள்ள லீலாதர் வகேலா மாடு முட்டியதால் படுகாயமடைந்து மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

பா.ஜ.கவை சேர்ந்த எம்.பி. லீலாதர் வகேலா (வயது 83). குஜராத்தின் படான் தொகுதியில் இருந்து உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் நடைப் பயிற்சிக்காக வீட்டில் இருந்து வெளியே வந்துள்ளார்.

அங்கு தெருவில் சுற்றி திரிந்த பசு ஒன்று இவரை முட்டி தாக்கியுள்ளது. தனது கைக்குட்டையால் பசுவை விரட்ட அவர் முயற்சித்துள்ளார். அது பயனளிக்கவில்லை. அதையடுத்து இவரை மாடு விரட்டி விரட்டி முட்டியது. இதனால் அவருக்கு இரு இடுப்பு எலும்புகள் மற்றும் தலையில் காயம் ஏற்பட்டு உள்ளது.

காயமடைந்த அவர் காந்தி நகரில் உள்ள தனியார் மருத்துவமனையில் வகேலா சேர்க்கப்பட்டு உள்ளார். மூச்சு விடுவதற்கு அதிக சிரமம் உள்ளது என கூறிய அவரை தீவிர சிகிச்சை பிரிவில் வைத்து சிகிச்சை அளித்து வருகின்றனர்.



## ஜெனீவா...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான் செயலணியில் பங்கு பற்றினாலும் இரண்டு அல்லது மூன்று கூட்டங்களுக்கு மேல் பங்குபற்ற முடியாது.

ஆகவே அரசியல் ரீதியாக எமது கட்சிக்குள்ளேயே எமது சிந்தனைகள் எவ்வாறு அமைகின்றன என்று கணிக்க இந்த விடயம் அனுசரணையாக அமைந்துள்ளது. அந்த அளவில் எனக்கு மகிழ்ச்சியே.

கேள்வி : ஓகஸ்ட் 30 ஆம் திகதி மாகாண சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளாது உங்கள் அமைச்சில் பதவி வகிக்கும் ஒரு அலுவலரின் திருமணத்திற்குச் சென்றீர்கள் என்பதைக் குற்றமாகக் காட்டீச் சிலர் முனைந்துள்ளார்கள். உங்கள் கருத்து?

பதில் : திருமணம் என்பது வாழ்க்கையில், அதுவும் தமிழர்கள் மத்தியில் பொதுவாக ஒரு முறையே வரும். மாகாணசபைக் கூட்டம் ஒரு மாதத்திற்கு இரு முறைவரும். இதை உணராதவர்கள் குற்றம் சாட்டுகின்றார்கள் போலும்!

கேள்வி : பளை காற்றாலை விடயம் சம்பந்தமான உங்கள் அலட்சியத்தால் வடக்கு மாகாண சபைக்குப் பெரும் நிதியிழப்பு என்று கூறப்பட்டுள்ளது. இது சரியா?

பதில் : முற்றிலுந் தவறானது. மத்திய அரசின் முதலீட்டுச் சபைக்குச் சொந்தமான திட்டந்தான் இந்தக் காற்றாலைத்திட்டம். நாம் பதவிக்கு வர முன்னரே உரிய அனுமதிகளைப் பெற்றே அவர்கள் தமது திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். எம்முடன் உடன்பாடு வைத்துக் கொண்டது Corporate Social Responsibility என்ற வகையில். சமூகப் பயன்பாட்டுக்காக ஒரு நிறுவனந்தன் விருப்பார்ந்தவாறு கொடுக்க முன்வரும் தொகையே CSR என்ற கொடை. அதை அவர்கள் தரலாம்; தராமல் விடலாம். அதில் நிதியிழப்பு எவ்வாறு ஏற்படக் கூடும்? எம்மால் உடன்பட்ட இருபது மில்லியன் ரூபாவும் எமக்குக் கொடையாளியால் தரப்படும் தன்னிச்சையான நிதியே. அந்தத் தொகையைக் அதிகரிக்க வேண்டுமானால் நாம் ஒரு வேண்டுகோள் விடுக்கலாம். அவர்கள் அதைப் பரிசீலித்துத் தமது கருத்தைத் தெரியப்படுத்தலாம். இது பேரம் பேசவேண்டிய தொகையல்ல. விருப்புடன் எமக்கு வழங்கப்படும் கொடை. இதனால் எமக்கு நிதி கிடைத்ததே ஒளிய நிதியிழப்பு ஏதும் ஏற்படவில்லை. அரசியலுக்காக ஆர்ப்பரிக்கப்படும் அவச் சொற்களே இவை. அத்துடன் நாம் பதவியேற்ற காலத்து விடயங்கள். இத்தனை வருடங்களின் பின் தற்போது எழுப்பப்படுகின்றன என்றால் அதன் அர்த்தம் என்ன? அலட்டிக்கொள்ளாதீர்கள். அப்படித்தான் அவர்கள்!

கேள்வி : அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம். வடமாகாண அமைச்சர்கள் சம்பந்தமாக எழுந் திருக்கும் சட்டப் பிரச்சினையை ஒரு நிமிடத்தில் தீர்க்கமுடியும் என்று கூறியுள்ளாரே. அது எப்படி?

பதில் : அவைத் தலைவர் என்ன கருத்தில் அவ்வாறு சொன்னாரோ தெரியாது. ஆனால் அவர் கூறுவதுபோல் ஒரு நிமிடத்தில் இந்தச் சிக்கலைத் தீர்க்கலாம். ஆளுநர் சென்ற வருடம் ஓகஸ்ட் மாதத்தில் நான் டெனீஸ்வரனை பதவிநீக்கம் செய்த விடயத்தை அப்பொழுதிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் (Retrospectively) இலங்கை வர்த்தமானியில் பிரசுரிக்க இந்தச் சிக்கல் தீரும். உரியவாறு கையெழுத்திட்டுக் கடிதம் அனுப்பினால் அது சிக்கலைத் தீர்க்கும். கையெழுத்திட ஒரு நிமிடம் தேவையில்லை.

பலர் தற்போதிருக்கும் ஐந்து அமைச்சர்களில் ஒருவரை நீக்குமாறு நான் சிபார்சு செய்யவேண்டும் என்றும் அவர் இடத்தில் டெனீஸ்வரன் வரவேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றார்கள். அது நடைமுறைச் சாத்தியம் அற்றது. காரணம் ஒரு அமைச்சரைப் பதவி இறக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு இல்லை என்று தெளிவாக மேன்முறையீட்டு நீதிமன்றம் கூறியுள்ளது. ஆகவே நான் எந்த ஒரு பதவி இறக்கமும் செய்யமுடியாது. ஏற்கனவே சிபார்சு செய்தாகிவிட்டது. அதை வலுப்படுத்த ஆளுநர்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால் அவர் தான்தோன்றித்தனமாக ஒரு அமைச்சரை நீக்கி டெனீஸ்வரனை உள் ஏற்றால் குறித்த அமைச்சர் நீதிமன்றம் செல்வார். தான் உரியவாறு ஆளுநரால் நியமிக்கப்பட்டவர் என்ற ரீதியில் ஆளுநர் தம்மை நீக்க முடியாது என்று வாதாடுவார். மேலும் முதலமைச்சரின் சிபார்சு இன்றித் தம்மை அவர் பதவி நீக்கம் செய்ய முடியாது என்று வாதாடுவார்.

ஆகவே இதற்கு ஒரே வழி 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலமைச்சர் பதவிநீக்கம் செய்த டெனீஸ்வரனின் பதவி நீக்கம் பற்றி அப்பொழுதிருந்து வலுவேற்கும் விதத்தில் வர்த்தமானியில் பிரசுரிப்பதுதான். ஆனால் அதனை ஆளுநர் செய்கின்றார் இல்லை. டெனீஸ்வரன் தம் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தீர்மானமொன்றைப் பெற்றவுடன் அவருக்குத் தொலைபேசி மூலம் உடனே பாராட்டுக்களைத் தெரிவித்தவர் ஆளுநரே. ஏதோ காரணத்திற்கு மேற் கூறப்பட்டவாறு பிரசுரிக்க அவர் தயங்குகின்றார். தயங்காது வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு உடனே நடவடிக்கை எடுத்தால் ஒருநிமிடம் போகாது குறித்த கையெழுத்து வைக்க.

## 3ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்காக வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுளது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து கல்லூரி, கொக்குவில் இந்து கல்லூரி ஆகியவையே க.பொ.த (உயர்தரப்) பரீட்சை மதிப்பீட்டு நிலையங்களாக வடக்கு மாகாணத்தில் உபயோகிக்கப்படுகின்றன.

எனினும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 3ஆம் தவணை இன்று ஆரம்பமாகும் என்றும் –

ஆயினும், க.பொ.த. (உயர்தர) கணித, விஞ்ஞானப் பிரிவுகள் மட்டும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் என்றும் – கல்லூரி அதிபர் சதா. நிமலன் தெரிவித்தார்.

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தின் எட்டாவது கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கு கடந்த மாதம், 30ஆம், 31ஆம் திகதிகளில், பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் பிரதமர் மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். எனினும், முன்னாள் இராணுவத் தளபதியும், பீல்ட் மார்ஷல் பட்டத்தைப் பெற்ற ஒரே ஒரு இலங்கையருமான சரத் பொன்சேகா இந்த கருத்தரங்கில் பங்கேற்கவில்லை.

அவருக்கு அழைப்பு அனுப்பப்பட்டது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். எனினும், அவர் நிகழ்வில் பங்கேற்காதமைக்கான காரணம் அறிவிக்கப்படவில்லை.

இராணுவத்தளபதி லெப்டினட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க வுடனான மனக்கசப்புகளால் தான், அவர் இந்தக் கருத்தரங்கைப் புறக்கணித்தார் எனக் கூறப்படுகிறது.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளமையால், வடக்கு மாகாணத்தில் இ.போ.ச. பஸ் சேவைகள் நேற்று நள்ளிரவு முதல் சேவையில் ஈடுபடவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜேராம மாவத்தையிலுள்ள மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெறவுள்ளது.

கட்சித் தலைவர்கள் கூட்டம் அன்றைய தினம் 5.00 மணிக்கு நடைபெறும் எனவும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டம் இரவு 7.00 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் அக்கட்சி வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

நாளை மறுதினம் நடைபெறவுள்ள கூட்டு எதிரணியின் அரசாங்கத்துக்கு எதிரான பாரிய ஆர்ப்பாட்டம் குறித்து இதன் போது விரிவாக கலந்துரையாடப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த ஆர்ப்பாட்டம் எங்கு நடைபெறும் என்பதை இரகசியமாக வைத்துள்ள கூட்டு எதிரணித் தலைவர்கள், அதனை நாளை கடைசி நேரத்திலேயே அறிவிப்பார்கள் எனக் கூறியுள்ளமை தெரிந்ததே.

## மக்களையும்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறியமையுடன் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்தின கூறியவை சரி என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதாவது மகாவலி எல் வலயம் ஊடாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்திலேயே குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்கான உறுதிப் பத்திரங்களே இந்த ஆட்சியில் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் இது தொடர்பில் நாங்கள் ஆராய்ந்த தற்கமைய ராஜித சேனாரத்தின கூறியவை சரியாகவே இருக்கின்றது. ஆகவே இந்த விடயங்கள் தொடர்பிலும் நாங்கள் அரசிற்கு தெளிவாக கூறியுள்ளோம் – என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு பலரும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். இந்நிலைமையிலே சுமந்திரனின் கருத்து தொடர்பில் மாகாண சபையின் முல்லை மாவட்ட உறுப்பினரும் அமைச்சருமான சிவநேசனிடம் வினவிய போதே மக்களையும் மண்ணையும் பற்றி சரியான அறி வில்லாமல் அரசியலுக்கு வந்தவர் கள் இப்படித் தான் கூறுவார்கள் என்றும் அவ்வாறான கருத்துக் களை கூறுகின்றவர்கள் முல்லைத்தீவுக்கு வந்து நிலைமைகளைப் பார்வையிட்டால் எல்லாம் புரியும் என்றும் சிவநேசன் தெரிவித்துள்ளார்.

## ஆஸ்பத்திரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசர பிரிவில் அவர் சேர்க்கப்பட்டார் என்றும் கூறப்பட்டது.

பின்னர் அவரைச் சோதனை செய்த வைத்தியர்கள் அவருக்கு உயர்குருதி அழுத்த அதிகரிப்புக் காரணமாக இவ்வாறு ஏற்பட்டது எனக் குறிப்பிட்டனர என அறிய வந்தது.

## 10 கட்சிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருதரப்பு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக பல கட்சிப் பிரதிநிதிகள் குழுவை புதுடில்லி வருமாறு நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது என்று கூறப்பட்டது.

இதற்கமைய, எதிர்வரும் 9ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதிவரை, 10 பேர் கொண்ட இலங்கையின் பல கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு, சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் புதுடில்லியில் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இந்தக் குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்),அவை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல (ஐக்கிய தேசியக் கட்சி), அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா (சுதந்திரக் கட்சி), தினேஷ் குணவர்த்தன (கூட்டு எதிரணி), அமைச்சர் றிசாத் பதியுதீன் (அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ), ரவூப் ஹக்கீம் (சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்), விஜித ஹேரத் (ஜே.வி.பி.), மனோ கணேசன் (தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர்), டக்ளஸ் தேவானந்தா( ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் ) ஆகியோர் இடம்பெறவுள்ளனர்.

இந்தியத் தலைவர்களுடன் இந்தக் குழு நடத்தவுள்ள பேச்சுக்களின் போது, பல்வேறு துறைகளின் ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்படவுள்ளது. இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கியதான அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் இந்திய தரப்பு இலங்கைக் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளது எனக் கூறப்பட்டது.

பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடவும், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவும் இந்தப் பயணம் நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று என்று டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் மக்களவை உறுப்பினர் சுப்ரமணியன் சுவாமியின் அழைப்பின் பேரில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லியில் வரும் 12ஆம் திகதி நடைபெறும் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றவுள்ளார்.

அவர் வரும் 11ஆம் திகதி புதுடில்லி செல்லவுள்ளார். அங்கு 3 நாள்கள் தங்கியிருப்பார்.

மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லியில் தங்கியிருக்கும் தருணத்திலேயே இலங்கையின் பல கட்சித். தலைவர்களையும் கொண்ட நாடாளுமன்றக் குழுவும் அங்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரு தரப்பினருமே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைத் தனித்தனியாகச் சந்திக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பள நிர்ணயம் தொடர்பாக ஆராய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் இந்த அதிகரிப்பு இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சிறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலைக்குள் அனுமதிக்கப்படவுள்ளார் எனவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள தேரருக்கு சிறைச்சாலை வைத்தியசாலையில் அணிவதற்கு ஜம்பர் ஒன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், அதனை அணிவதற்கு தேரர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

மகாநாயக்க தேரர்கள் இணங்கினால் மட்டுமே தான் ஜம்பர் அணிவார் என ஞானசார தேரர் சிறைச்சாலை அதிகாரிகளிடம் குறிப்பிட்டுள்ளார். அப்படியல்லாமல், எக்காரணம் கொண்டும் தனது காவி உடையைக் களைய மாட்டேன் எனவும் தேரர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் சிறைச்சாலை நிருவாகம் சிறைச்சாலை தலைமையகத்துக்கு அறிவித்தல் வழங்கியுள்ளதாகவும், இதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை என்னவென சிறைச்சாலைகள் அமைச்சை கோரியுள்ளதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (உ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிப்பதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தற்போதைய பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் அடுத்த மாதம் ஓய்வு பெறவுள்ளார்.

இந்த நிலையிலேயே சட்டமா அதிபராக உள்ள ஜயந்த ஜயசூரியவின் பெயரைப் புதிய பிரதம நீதியரசர் பதவிக்கு ஜனாதிபதி முன்மொழியவுள்ளார். எனினும் பிரதம நீதியரசர் பதவிக்கான நியமனத்தை சபாநாயகர் தலைமையிலான அரசமைப்புச் சபையே உறுதி செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசமைப்புச் சபையில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளடங்கியுள்ளனர்.

பிரதம நீதியரசர் நியமனத்துக்கான பெயரை அரசமைப்புச் சபை பரிந்துரைக்கும்போது, ஜனாதிபதி நியமனத்தை வழங்குவார். அரசமைப்புச் சபையால் பரிந்துரைக்கப்படுபவர் பொருத்தமற்றவர் எனக் கருதப்படும் போது, அவருக்கு நியமனம் வழங்காமல், ஜனாதிபதி வேறு ஒருவரைப் பரிந்துரைக்குமாறு அரசமைப்புச் சபையைக் கோர முடியும்.

இதேவேளை, இரண்டாவது பெண் பிரதம நீதியரசராக உயர் நீதிமன்றின் நீதியரசர் சாந்தி ஈவா வனசுந்தர நியமிக்கப்படுவார் என்று சட்டத் துறையினரால் எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய பிரதம நீதியரசருக்கு அடுத்தபடியாக நீதியரசர் சாந்தி ஈவா வனசுந்தர மூப்புநிலையில் உள்ளார். அவர் முன்னாள் சட்டமா அதிபர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு





தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான இரட்டை மாட்டு வண்டி சவாரி போட்டி மன்னார் பரிகாரிக்கண்டல் இரட்டை மாட்டு வண்டி சவாரித் திடலில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற குறித்த போட்டி, மன்னார் மாவட்ட மாட்டுவண்டி சவாரிச் சங்கத்தின் அனுசரணையுடன் பரிகாரிக்கண்டல் கிராம மக்களினால் நடத்தப்பட்டது.

இப்போட்டியில் வடக்கு மாகாணத்தின் மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 31 சோடி காளைகள் பங்குபற்றின.

இந்தப் போட்டிகள் நான்கு பிரிவுகளாக நடைபெற்றதுடன், நான்கு பிரிவுகளிலும் மன்னார் மாவட்ட காளைகள் முதல் இடங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா வடக்கு பிரதேச செயலர் அணி அரச அதிபர் கிண்ணத்தைச் சுவீகரித்தது!



வவுனியா, செப் 03

வவுனியா மாவட்ட அரச அதிபர் கிண்ணத்திற்கான உதைபந்துப் போட்டியில் வெற்றி வாகை சூடியது வவுனியா வடக்கு பிரதேச செயலக அணி.

மாவட்டத்தில் உள்ள திணைக்களங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் அரையிறுதியில் பலம் பொருந்திய பொலிஸ் அணியை 1:0 என்ற கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டியில் மற்றுமொரு பலமான அணியாகிய வைத்தியசாலை அணியுடன் மோதியதில் 3:1 என்ற அடிப்படையில் வடக்குப் பிரதேச செயலக அணி பெரு வெற்றி பெற்றது.

அணியின் முன்னணி வீரர் சுதாகரன் அசத்தலாக ஹட்ரிக் கோல் அடித்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். அசத்தலான ஆட்டத்தை மற்றொரு முன்னணி வீரர் கார்த்தி நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ – 100)




# விராட் கோஹ்லிக்கு ஓய்வு: அணித் தலைவராக ரோகித்

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

14 ஆவது ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இதில் நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் உட்பட 6 அணிகள் கலந்து கொள்கின்றன.

இந்நிலையில் ஆசிய கிண்ண போட்டிக்கான இந்திய அணி மும்பையில் அறிவிக்கப்பட்டது.

முதுகு வலி காரணமாக இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லிக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

அவருக்குப் பதிலாக ரோகித் சர்மா அணியை வழிநடத்தவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் விவரம் வருமாறு: –

ரோகித் சர்மா (தலைவர்), ஷிகர் தவான், கே.எல்.ராகுல், அம்பதி ராயுடு, மணிஷ் பாண்டே, கேதர் ஜாதவ், எம்.எஸ் டோனி, தினேஷ் கார்த்திக், குல்தீப் யாதவ், ஹர்திக் பாண்ட்யா, ஒவை சாகல், அக்சர் படேல், புவனேஷ்வர் குமார், ஜஸ்பிரித் பும்ரா, ஷர்துல் தாகூர், கலீல் அகமது.

# ஆரம்பப் போட்டியில் இலங்கை வெற்றி



ஆசிய வலைபந்தாட்டப்போட்டியில் இலங்கை அணி தனது முதாவது போட்டியில் சாதனைமிகு வெற்றியை ஈட்டியது.

சிங்கப்பூர் ஸ்போர்ட்ஸ் கிளப்பில் அமைந்துள்ள சிங்கப்பூர் ஓசிபிசி எரினா உள்ளக அரங்கில் ஆரம்பமான 11ஆவது எம் 1 ஆசிய வலைபந்தாட்ட வல்லவர் போட்டிகளில் பி குழுவில் இடம்பெறும் முன்னாள் சம்பியன் இலங்கை தனது முதலாவது போட்டியில் சாதனை மிகு வெற்றியை ஈட்டியது.

சைனீஸ் தாய்ப்பே அணிக்கு எதிராக நடைபெற்ற தனது ஆரம்பப் போட்டியில் கோல்மழை பொழிந்த இலங்கை 137:5 என்ற கோல்கள் கணக்கில் அமோக வெற்றிபெற்றது.

நேற்றைமுன்தினம் நடைபெற்ற போட்டிகளில் இலங்கை மாத்திரமே 100 கோல்களைக் கடந்தது. முதல் இரண்டு போட்டிகளில் 100 கோல்களை இலங்கை கடக்கும் என பயிற்றுநர் திலகா ஜினதாச கூறியதற்கு அமைய முதலாவது போட்டியில் இலங்கை 100 கோல்களைக் கடந்தமை குறிப்பிடத்தக்கது.

போட்டியின் முதல் கால் மணி நேர ஆட்ட முடி



வில் இலங்கை 37:2 எனவும் இரண்டாவது கால் மணி நேர ஆட்ட முடிவில் 37:0 எனவும் முன்னிலையில் இருந்தது. இதன் பிரகாரம் இடைவேளையின்போது 64:2 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலை வகித்தது.

மூன்றாவது கால் மணி நேர ஆட்டத்திலும் ஆதிக்கம் செலுத்திய இலங்கை 32:1 என முன்னிலை வகித்ததுடன் 100 கோல்களையும் கடந்திருந்தது.

கடைசி ஆட்ட நேர பகுதியிலும் சைனீஸ் தாய்ப்பேயை துவம்சம் செய்த இலங்கை 31:2 என முன்னிலை வகித்து ஆட்டம் முடிவுக்கு வந்தபோது 137:5 என்ற கோல்கள் கணக்கில் அமோக வெற்றிபெற்றது. இந்த வெற்றியானது இவ் வருடப் போட்டிகளில் இலங்கை அணிக்கு சம்பியனாவதற்கான வாய்ப்பு இருப்பதை எடுத்துக்காட்டியது.

11ஆவது ஆசிய வலைபந்தாட்ட வல்லவர் போட்டிகளின் ஆரம்பப் போட்டியில் (சி குழு) புருணையை எதிர்த்தாடிய சிங்கப்பூர் 68:19 என்ற கோல்கள் (19:4, 20:4, 15:6, 14:5) அடிப்படையில் வெற்றிபெற்றது.

ஏ குழுவுக்கான போட்டியில் ஜப்பானை 88 க்கு 13 என்ற கோல்கள் (22:5, 26:1, 23:3, 17:4) அடிப்படையில் மலேசியாவும் டி குழுவுக்கான போட்டியில் பிலிப்பைன்ஸை 71க்கு 36 என்ற கோல்கள் (20:10, 20:9, 18:6, 13:11) கணக்கில் தாய்லாந்தும் வெற்றி பெற்றன.

இலங்கை தனது இரண்டாவது போட்டியில் இந்தியாவை நேற்று ஞாயிற்றுக்கிழமை எதிர்த்தாட இருந்தது.

# தர்மலிங்கம் நினைவு தினத்தில் உணர்வு பூர்வமாக அஞ்சலி







தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் தந்தையாருமாகிய அமரர் வி.தர்மலிங்கத்தின் நினைவு தின நிகழ்வுகள் நேற்று தாவடியில் அமைந்துள்ள அமரரின் நினைவுத்தூபியில் இடம்பெற்றன.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கௌரிகாந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா தூபிக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். நினைவுப் பேருரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் புஷ்பரட்ணம் ஆற்றினார். இதில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# நல்லூர் ஆலயத்தில் பொற்கூரை நேற்று சிறப்புற கும்பாபிஷேகம்



நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய ஷண்முகர் ஸ்வர்ண விமான ( தங்கவிமான அல்லது பொற்கூரை) மஹா கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது.

நல்லூர் ஆலய மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வரும் நிலையில் நேற்று கார்த்திகை நட்சத்திர நாளில் ஸ்வர்ண விமான கும்பாபிஷேகம் இடம்பெற்றுள்ளது.

காலை 06 மணியளவில் ஆரம்பமான விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ஐந்து பிரதான கும்பங்களை சிவாச்சாரியர்கள் ஏந்தி உள்வீதி வலம் வந்து பொற்கூரை மீதுள்ள கலசங்களுக்கு பூஜைகள் நடைபெற்றன.

அதனை தொடர்ந்து வசந்தமண்டப பூஜை இடம்பெற்று முத்துக்குமார சுவாமி வள்ளி, தெய்வானை சமேதரராய் தங்க மயில் வாகனத்தில் எழுந்தருளி உள் வீதியுலா வந்து, காலை 6.45 மணியளவில் வேத பாராயணம் ஓதி மங்கள இசை எழும்ப கலச அபிகேம் நடைபெற்றது.

இந்த மஹாகும்பாபிசேகக் கிரியைகளை நடத்துவதற்கு, தென்னிந்தியாவில் சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் திருக்கோயிலை சேர்ந்த ஸ்ரீ சிவ ஸ்ரீ ஐயப்ப சபேஸ தீக்ஷிதர் உள்ளிட்ட நான்கு பூஜ்ய ஸ்ரீ தீக்ஷிதர்களும் இன்னும் சில வேத பண்டிதர்களும் நல்லூருக்கு வருகை தந்திருந்தனர்.

தமிழகத்தில் சிதம்பரம் நடராஜர் கோயில், பழனி தண்டாயுதபாணிஸ்வாமி கோயில், திருப்பதி ஸ்ரீ ரங்கநாதர் கோயில், காஞ்சி காமாக்ஷியம்மன் கோயில் போன்ற ஆலயங்களில் தங்க விமானங்கள் உள்ளன. நேற்றைய தினத்துடன் இலங்கையில் பொற்கூரை வேய்ந்த முதல் ஆலயம் நல்லூர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாங்குளம் விபத்தில் ஒன்பது பேர் படுகாயம்



யாழ்ப்பாணம் – கண்டி ஏ9 வீதியில் ஏற்பட்ட விபத்தில் 9 பேர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தம் நேற்று அதிகாலை மாங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் வான் ஒன்று மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுற்றுலாப் பயணம் சென்று மீண்டும் வீடு நோக்கி பயணித்து கொண்டிருந்த நபர்களின் வான், லொறி ஒன்றின் பின்னால் சென்று மோதியமையினால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளத.

விபத்தில் காயமடைந்தவர்கள் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வான் சாரதியின் கவனயீனமே விபத்திற்குக் காரணம் எனக் கூறப்பட்டது. காயமடைந்தவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம், சுன்னாகம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்தது.

# புளியங்கூடலில் நேற்று மாட்டுவண்டிச் சவாரி






நேற்று மாலை புளியங்கூடல் மாட்டு வண்டிச் சவாரித் திடலில் இடம்பெற்ற மாட்டுவண்டிச் சவாரிப்போட்டியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்நிகழ்வில் நான்கு பிரிவுகளில் பலர் தமது காளைகளுடன் வந்து போட்டியில் பங்குபற்றினர். இந்த மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியை புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள்
பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை



20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, மாநகரசபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

கிளிநொச்சியில் – இல.10, கண்டி வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (தம்ரோ காட்சியறை அருகில்). 076 443 1576

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.09.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.